# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 16 ஞாயிற்றுக்கிழமை (31-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:35


# தென்மராட்சிப் பகுதியில் படையினர் நேற்று மற்றுமொரு நடவடிக்கை!

## மினி சினிமா கொட்டகை தீயில் நாசம்!

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.சிவகுருநாதர் வீதிப் பகுதியில் ஒழுங்கை ஒன்றில் அமைந்திருந்த மினிசினிமாக் கொட்டகை ஒன்று நேற்றிரவு திடீரெனத் தீப்பிடித்து எரிந்து சாம்பலானது.

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் அப்பகுதிக்கு விரைந்து சென்று தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதால் தீ அருகில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது நாளாக எழுச்சி நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.31

'தமிழ் மக்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே' என்பதை சர்வதேச சமூகத்திற்கு ஒருமித்த குரலில் வெளிப்படுத்தும் நோக்கில் யாழ்.பல்கலைக்கழக சமூகம் இரண்டாவது நாளாக நேற்றும் எழுச்சி நிகழ்வுகளை நடத்தியது.

நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்த உணர்வுபூர்வமான நிகழ்வு பிற்பகல் ஒரு மணி வரை இடம்பெற்றது.

நேற்றைய நிகழ்விலும் பல்கலைக்கழகத்தின் அனைத்துப்பீட மாணவர்களும் விரிவுரையாளர்களும் ஏனையோரும் பெருமளவில் கலந்து கொண்டனர். மாணவர்களாலும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாழ் வரை ஏ-9 நெடுஞ்சாலை முழுக் கட்டுப்பாட்டில் என்று தெரிவிப்பு

கொழும்பு,டிசெம்பர்31

**நாவற்குழி மற்றும் கைதடிப் பகுதிகளில் நேற்றுக் காலை முதல் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது நாவற்குழிப் பாலம், கோயிலாக்கண்டிப் பகுதி உட்பட சுமார் 12 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டதாகப் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.**

'கினிகிர-8' என்று பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி ஊடான எழுதுமட்டுவாழ் வரையான ஏ-9 நெடுஞ்சாலை தமது முழுக்கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6 மணி முதல் தாக்குதல்களை நடத்தியவாறு புலி

(14ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஊரடங்கு இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.31

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு குடாநாட்டில் இன்று இரவு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று பலாலி இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கிறிஸ்தவர்கள் இன்று தமது சமய வழிபாடுகளுக்குச் செல்வதற்கு வசதியாகவே ஊரடங்குச் சட்டம் இன்று இரவு முழுவதும் நீக்கப்பட்டுள்ளது.

(இ-6)

## திருவெம்பாவையை முன்னிட்டு ஊரடங்கு தளர்த்தப்பட்டது

## இன்று முதல் பத்து நாள்களுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.31

இன்று ஆரம்பமாகவுள்ள திருவெம்பாவை உற்சவத்தில் பக்தர்கள் ஆலய வழிபாட்டினை மேற்கொள்ள வசதியாகக் குடாநாடு முழுவதும் இரவு நேர ஊரடங்கு அதிகாலை 4.00 மணியுடன் தளர்த்தப்படவுள்ளது.

இந்த ஊரடங்கு நேரத் தளர்வு இன்று 31ஆம் திகதி ஆரம்பமாகி திருவெம்பாவை உற்சவகாலம் முடியும் வரை தொடர்ச்சியாகப் பத்து நாள்களுக்கு அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவெம்பாவை உற்சவகாலப் பகுதியில் ஊரடங்கைத் தளர்த்தி பக்தர்கள் அதிகாலை வேளையில் ஆலய தரிசனம் செய்ய உதவுமாறு வலிகாமம் மேற்கு இந்து ஆலய மகா

(14ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தத்தைக் குழப்பும் நடவடிக்கையில் அரச தரப்பு!

## புலிகள் குற்றச்சாட்டு

வவுனியா,டிசெ.31

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தைப் புலிகள் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் இந்த வேளையில் அரசு தனது படைகளின் உதவியுடன் அதனைக் குழப்பும் நடவடிக்கையில் தாக்குதல்களை நடத்தி வருகிறது. சர்வதேச சமூகத்தின் முன் சமாதான விரும்பியாகச் செயற்பட்டு வந்த ஸ்ரீலங்கா அரசு புலிகளின் யுத்த நிறுத்தத்தை அடுத்து தனது உண்மை முகத்தை வெளிப்படுத்தி வருகிறது.

மேற்கண்டவாறு 'புலிகளின் குரல்' வானொலி நேற்று ஸ்ரீலங்கா அரசு மீது குற்றஞ் சுமத்தியது.

அரச படையினர் தென்மராட்சியில் 'கினிகிர-8' படை நடவடிக்கையை நேற்று ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே புலிகள் தரப்பில் இருந்து இந்தக் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது.

(இ-164)

## மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக

## ஓர் அதிகாரி உட்பட மேலும் 6 படையினர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம்,டிசெ.31

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக ஓர் அதிகாரி உட்பட மேலும் 6 படையினர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று யாழ். பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே அதிகாரி உட்பட 7 படையினர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களுடன் சேர்த்து இந்தப் படுகொலைகள் தொடர்பாக இது வரை இரு அதிகாரிகள் உட்பட 13 படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

இந்தப் படுகொலைகள் தொடர்பாக விசாரணை நடத்திவரும் யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உபாலி குணசேகரா விசாரணைகளின் முன்னேற்றம் திருப்திகரமாக அமைந்துள்ளதாகவும் -

பல கோணங்களில் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் - நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகளின் போது நீதிவானிடம் தெரிவித்தார்.

(ம-173)

# யுத்தநிறுத்தம் குறித்து அரசு செவ்வாயன்று முக்கிய முடிவு!

கொழும்பு,டிசெ.31

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டமும் மத்திய குழுக் கூட்டமும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்றன. இந்தக் கூட்டங்களை அடுத்து புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெறும் அரசியல் குழு மற்றும் மத்திய குழுக் கூட்டங்களில் யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசு முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்கலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கம் தற்காலிக யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வது குறித்து இந்தக் கூட்டங்களில் முடிவு செய்யப்படலாம் என்று அரசில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் நாட்டில் சமாதானம் நிலவ புத்தாண்டில் யுத்தநிறுத்தம் அவசியமானது என்று தொழில் அமைச்சர் அலவி மௌலானா கருத்துத் தெரிவித்துள்ளார்.

(இ-6)

## மிருசுவில் படுகொலை குறித்து மகேஸ்வரன் வாக்குமூலம்

### பொலீஸ் நிலையத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டார்

யாழ்ப்பாணம்,டிசெ.31

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக சம்பவ இடத்திலிருந்து தப்பி வந்ததாகக் கூறப்படும் பொன்னுத்துரை மகேஸ்வரன் நேற்று பருத்தித்துறை பொலீஸில் வாக்கு மூலம் அளித்தார்.

ஈ.பி.டி.பி. அமைப்பினரின் பாதுகாப்பில் இருந்த அவர் நேற்று அந்த அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களின் பாதுகாப்புடன் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வாக்குமூலம் அளித்த பின்னர் அவர் மீண்டும் ஈ.பி.டி.பி. அமைப்பினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். (ம)

# மகனின் முகம் வீங்கிக் கால்களில் காயங்கள் இருந்ததைக் கண்டேன்

## தப்பி வந்தவரின் தந்தை சாட்சியம்

வடமராட்சி,டிசெ.31

மிருசுவில் பகுதிக்குச் சென்ற எனது மகன் வீடு திரும்பாததை அடுத்து நான் அவரைத் தேடிச் சென்றபோது மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் எனது மகன் இன்னொருவருடன் சைக்கிளில் வருவதைக் கண்டேன். அவர் மிகவும் பயந்து இருந்தார். முகம் வீங்கிக் காணப்பட்டது. கால்களில் கம்பியினால் கீறப்பட்ட காயங்கள் இருந்ததைக் கண்டேன்.

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக மூன்றாவது நாளாக நேற்று நடைபெற்ற விசாரணைகளில் சாட்சியமளித்த கந்தையா பொன்னுத்துரை (வயது 60) இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் இருந்து தப்பி வந்தவரான பொ.மகேஸ்வரனின் தந்தையான அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'புதைகுழி தோண்டப்பட்ட சமயம் அதனைப் பார்ப்பதற்குத் தாங்க முடியாததால்; நான் அருகில் செல்லவில்லை. சடலங்கள் குழியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு கறுப்பு மெழுகு சீலையில் வைக்கப்பட்ட பின்னர் என்னிடம் காட்டப்பட்டன. அங்க அடையாளங்களை வைத்து சடலங்களை நான் அடையாளம் காட்டினேன்.

அவர்கள் எல்லோரும் எனது உறவினர்களே. அவர்களை நன்கு அறிந்திருந்தபடியால் சடலங்களை என்னால் அடையாளம் காட்ட முடிந்தது.

கடந்த 19 ஆம் திகதி எனது மகன் மகேஸ்வரன் விறகு வெட்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## கால்கள் வெளியே தெரியும் நிலையில் புதைக்கப்பட்ட பெண்ணின் சடலம்

### தனது கணவர் கண்டதாக மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

மிருசுவில் கொடிகாமம் பகுதிக்கு விறகு, தேங்காய் பொறுக்குவதற்குச் சென்ற போது மஞ்சள் நிற பஞ்சாபி அணிந்த ஒரு பெண்ணின் கால்களை மணலுக்கு வெளியே தாம் கண்டதாகவும் - ஏனைய பகுதிகள் புதைக்கப்பட்டிருந்ததாகவும் கடந்த 16 ஆம் திகதி இரவு என்னுடன் கதைத்துக்கொண்டிருந்த போது எனது கணவர் தெரிவித்தார்.

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக மூன்றாவது நாளாக நேற்று இடம்பெற்ற விசாரணைகளின் போது சாட்சியம் அளித்த ஜெயசுதா தெய்வகுலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பருத்தித்துறை ஆஸ்பத்திரியில்
# மனநோயாளிகளுக்கு பொழுதுபோக்கு வசதி

வலி.வடக்கு,டிசெ.31

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் தங்கியுள்ள உளநல நோயாளர்களுக்கு வேண்டிய பொழுது போக்கு வசதிகளை உளநலச் சங்கம் ஏற்படுத்தியுள்ளது.

உளநல சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி நா.ஜமுனாநந்தன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

முதற்கட்டமாக அங்கு தங்கியுள்ள நோயாளர்களுக்கு உள்ளக விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர நோயாளர்களுக்கான தொழில்வழிச்சிகிச்சை முறைகளின் கீழ் சிறு தொழில்களை பழக்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-86)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,டிசெ.31

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அமரர் அ.தம்பிராசா ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள் விவரம் வருமாறு:

※மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க விளையாட்டுக்கழகம் எதிர் நவாலி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம். (ஐ-86)

## ஒளி விழா

வலி.வடக்கு,டிச.31

கோண்டாவில், இணுவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒளி விழா நிகழ்ச்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-86)


இன்று! **BOND**

பரீட்சைக்கு வருவோர் ஆரியகுளம் சந்தியினூடாக வரவும்.

சித்தன்கேணி
**கொம்ரெக்**
கல்வி நிலையத்திலும் பரீட்சை நடைபெறும்.
(82353)

**சயன்ஸ் அக்கடமி**
**நல்லூர்**

தரம் 4 முதல் O/L வரை புதிய மாணவர்களை பிரிவு II இல் இணைக்க அனுமதிகள் மீண்டும் புதிதாக வழங்கப்படுகின்றன. (82314)

**வணிகக்கல்வி**

வே.முரளி
இரு இடத்தில்
2001 A/L
*DAY CLASS*
பிரிவு II
அலகு ரீதியான மீட்டல்
ஒவ்வொரு அலகிற்கும் 100க்கு மேற்பட்ட பயிற்சி வினாக்களுடன்
ஆரம்பம் 02.01.2001
**பொருளியற் கல்லூரி**
1. யாழ்ப்பாணம்.
2. இணுவில். (82344)

**CLASSES**
**Radio repairing,**
**Mr.R.G.Kirupakaran,**
**College Lane,**
**Vaddukoddai.**
**T.P.021-2525**
(82348)

*ஆங்கிலக் கல்லூரி*
அச்சுவேலி
ஆவலோடு எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு
***SPOKEN ENGLISH WITH GRAMMAR***
ஆரம்பம்:-
01.01.2001 (10.a.m.)
ஆசிரியர்:-
திரு.B.மனோகரன்
(அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்)
(82351)

வடமராட்சியில்......
பொருளியல் கல்வியை மேம்படுத்த வருகிறார்
**S.வரதராஜன்**
**DAY 2001 A/L**
ஆரம்பம்: 01-01-2001
முற்பகல் 9-12 வரை.
**கிறிஸ்ரல் சென்ரர்**
**நெல்லியடி.**
(82355)

**ராஜா** யாழ்ப்பாணம்
விஜய், மோனிக்கா, ரம்பா,மணிவண்ணன்
மற்றும் பலரின் வித்தியாசமான நடிப்பில்
**மின்சாரக்கண்ணா**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)

**லஷ்சுமி சினிமா**
இணுவில்
கடைசி வாரமாக
விஜய், சிம்ரன் நடித்த
**துள்ளாத மனமும் துள்ளும்**
(ரீஸ்ஸ்) காட்சிகள் 10.30, 2.30 (பு.நே.)
01.01.2001 திங்கள்
**வாலி**

**நாகம்ஸ்**
சுன்னாகம்
**TITANIC**
**டைட்டானிக்**
(தமிழ் ~ தீஸ்ஸ்)
✪ டைட்டானிக் என்ற கப்பலுக்கு நடந்த பயங்கரம்.
✪ இது ஒரு உண்மைச் சம்பவம். இது ஒரு உண்மையான காதல் சம்பவம்.
✪ உலகில் உள்ள எந்தச் சக்திகளாலும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது.
காட்சி நேரங்களில் மாற்றம்
புதிய நேரம் 10.30, பி.ப. 2.30.


## சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை
# புலமைப் பரிசில் - 2000

சிதம்பரக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் வழங்கப்படுகின்ற வருடாந்த புலமைப்பரிசில்களில் 2000ஆம் ஆண்டுக்கான பரிசில்களைப் பெறுவோர் வருமாறு:-

| | | |
|---|---|---|
| தரம் 06 - செல்வி சிந்துஜா சரவணமுத்து | 5,000/= | வல்வை திரு.திருமதி பீதாம்பரம் அவர்கள் நினைவாக புதல்வர்கள். |
| தரம் 07 - செல்வன் கணேசரத்தினம் கார்த்திபன் | 5,000 /= | வல்வை திரு.திருமதி பீதாம்பரம் அவர்கள் நினைவாக புதல்வர்கள். |
| தரம் 11 - செல்வன் இராதாகிருஷ்ணன் இரஜித்குமார் | 10,000/= | ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் V.C. மோதிலால் நேரு அவர்கள் நினைவாக குடும்பத்தினர். |
| தரம் 12 - செல்வி வலன்ரீனா மோனகுரு (கலை) | 10,000/= | திருமதி சுலோசனாதேவி சாந்தலிங்கம் நினைவாக திரு.சாந்தலிங்கமும் பிள்ளைகளும். |
| தரம் 12 - செல்வி மோகனா மோனகுரு (வர்த்தகம்) | 10,000/= | முன்னாள் ஆசிரியர் அமரர் முத்துக்குமாரசாமி அவர்கள் நினைவாக மகன் திரு. மு.கந்தசாமி. |
| தரம் 13 - செல்வி கலாவதனி செல்வச்சிவம் (கலை) | 10,000/= | திரு.இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம் R.V.G. |
| தரம் 13 - செல்வன் ஜெயச்சந்திரன் தனந்தன் (வர்த்தகம்) | 10,000/= | ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் V.C. மோதிலால் நேரு அவர்கள் நினைவாக குடும்பத்தினர். |

※ 2001 ஆம் ஆண்டு மேலும் கூடுதலாக சகல வகுப்பு மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

※ கல்லூரியில் இருந்து வெளியேறும் மாணவர்கள் கணனிக் கல்வியும் பயிற்சியும் பெற அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*வல்வெட்டித்துறை.* சிதம்பரக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம்.

(82325)

சிவமயம்



வண்ணை சாந்தையர் மடம் - ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயில்

## விநாயக சஷ்டி விரதம்

காலம் : இன்று (31.12.2000) ஞாயிறு
முற்பகல் 8.30 கலச சங்காபிஷேகம் (108)
12.00 மணி உச்சிக் காலப்பூசை
12.30 மணி பஞ்சமுகார்ச்சனை
பிற்பகல் 3.00 மணி பிள்ளையார் கதைப் படிப்பு
3.30 மணி ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் உற்சவமும் - கஜமுக சூர சங்காரமும்.
6.00 மணி விசேட பூசை
விசேட மேளக் கச்சேரியாக
சுந்தரமூர்த்தி குழுவினர்,
மாக்கையா குழுவினர்,
நித்தியானந்தம் குழுவினர்.

**உபயம் : அற்புதா ரேடிங் கம்பனி**
198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/14566)

## பிறந்தநாள் வாழ்த்து

31.12.2000

HAPPY BIRTHDAY



### திரு. பாலசுந்தரம் நித்தியானந்தம்

ஓய்வு பெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர் **பாலசுந்தரம் நித்தியானந்தம்** அவர்கள் தனது 55ஆவது பிறந்ததினத்தை தனது தற்காலிக முகவரி காளிகாவத்தை, அளவெட்டி மேற்கில் இன்று (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை மனைவி சிவயோகம், பிள்ளைகள் கோமதி (கனடா), தயாளன் (வன்னி), ஜெனார்த்தனன் (டோகா), ஜெகன், மாலா, வாணி. பெறாமக்கள்:- கீதா, ரகு ஆகியோரும் மற்றும் மச்சான்மார், மச்சாள்மார், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் விளைவேலி மருதடி விநாயகர் அருளால் பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*செம்மணி வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*நல்லூர்.*

தகவல்:
ரகு
(பெறாமகன்)

(82329)


"எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம்"

**நத்தார் பண்டிகை - 2000**

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
**கானான் ஜெப ஆலயம்**
வழங்கும்
**ஒளிவிழா நிகழ்ச்சிகள்**

※ இன்னிசை கானங்கள், கண்ணுக்கினிய நாடகங்கள்
※ எழுச்சியூட்டும் நாடகங்கள், பார்க்கப் பரவசமடைய இன்னும் பல நிகழ்ச்சிகள்

காலம்: இன்று 31.12.2000 ஞாயிற்றுக்கிழமை
நடைபெறும் இடம்: கானான் இருபாலை கோப்பாய்

**நேரம் :- மாலை 3.00 மணி**

"யாவும் இலவசம்! யாவரும் திரண்டு வருக!!"

"அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டம் என்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன். (பிலி.3X12)"

※ இன்று காலை 9.00 மணிக்கு விசேட ஆராதனை நடைபெறும். ※

**விசேட அறிவித்தல்:**
31.12.2000 விழிப்பு இரவு 2001 ஆராதனை, இரவு 9.00 மணிக்கு ஆரம்பமாகும். ஆராதனையில் கலந்து கொள்பவருக்கு தங்கிச் செல்லுவதற்கு வசதி செய்யப்படும். (C/14561)

# உதயன்

## பல்கலைக்கழக எழுச்சி நிகழ்வு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங் களைச்சேர்ந்த மாணவர்களும், பேராசிரியர்கள், விரிவுரை யாளர்களும், துணைவேந்தர் உட்பட நிர்வாகிகளும் சேர்ந்து நேற்று முன்தினம் எழுச்சி நிகழ்வு ஒன்றினை நடத்தினர்.

யாழ். பல்கலைக்கழகச் சமூ கம் முன்னர் எப்போதும் இல் லாதவாறு ஒன்று திரண்டு ஒரே அணியாக நின்று, இந்த எழுச்சி நிகழ்வை நடத்தியது மிகவும் வித்தியாசமான ஒன் றாக அமைந்தது. இந்த வேளையில் மிகவும் தேவைப் பட்ட நிகழ்வாகவும் அது விளங் கியது.

பத்து வருடங்களுக்கு மேலாக மிகத் தீவிரமாக நடைபெற்று வரும் போரினால் — இரண்டு நாடுகளுக்கிடையே நடைபெறு வது போன்ற போரினால் — மிகப்பெரிய அழிவுகளையும் இழப்புக்களையும் அனுபவித்து வருபவர்கள் தமிழ் மக்களே. தமிழர்களின் உரிமைப் போராட் டமே இந்தப் போருக்கு வழி யிட்டது. பிரதானமான, ஆதார மான சில உரிமைகளைப் பெறுவதற்காகவே உரிமைப் போராட்டம் ஆரம்பமானது.

ஆனால் தமிழ் மக்கள் கேட் கும், கோரும் உரிமைகள் குறித் துக் கொழும்பில் தப்பான கருத் துக்களும் தவறான விளக்கங் களும் கொள்ளப்பட்டுள்ளன; விதைக்கப்பட்டுள்ளன. அங்கி ருந்து வெளிநாடுகளுக்கும் அந் தக் கருத்துக்கள் பரப்பப்படு கின்றன; வேகமாகப் பரவியும் விட்டன.

வெறும் அதிகாரப்பரவல் திட் டத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கே கொழும்பு அரச மட்டத்தில் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. அந்த முயற்சிக்கும் தடங்கல்கள் போடப்படுவது வேறு. தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கை தங்கள் சுயநிர்ண யம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். அவர்களது அரசியல் அபிலாசைகளின் அடி நாதமாக விளங்குவதும் அதுவே.

சுயநிர்ணய உரிமையை அடித் தளமாகக் கொண்டே தமிழ் மக்களின் ஏனைய உரிமைகள் எவை என்ற வடிவங்கள் விரி யும். ஆகக் குறைந்தது வடக்கு - கிழக்குத் தாயகத்தின் தன் னாட்சி உரிமை என்ற ஆட்சி வடிவம் இல்லாத எந்தத் தீர் வும் தமிழருக்கு நன்மை தராது; ஏற்றுக் கொள்ளவும் முடியாதது.

ஆனால் கொழும்பு அரசும் சரி அதன் பக்கமாகப் பேசும் வெளிநாடுகளும் சரி தமிழர் களின் சுயநிர்ணய உரிமை என்ற அடித்தள விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததாக இல்லை.

போர் நிறுத்தம், சமாதானப் பேச்சு, தீர்வு முயற்சி என்ற அலைகள் சற்றுக் கனதியாக வீசத் தொடங்கி உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ்மக்களின் அடிப்படைக் கோரிக்கை சுய நிர்ணய உரிமையே என்று உரக்க ஒலிக்கப்பட வேண்டி யது மிகவும் அத்தியாவசிய மானதாகும்.

யாழ். பல்கலைக்கழகம் ஒரே அணியில் நின்று எழுச்சி நிகழ்வின் மூலம் அந்தக் குரலை ஒலித்திருப்பது — உல கத்துக்கு அதனை ஆணித்தர மாக எடுத்துச்சொல்லும் மிக முக்கிய பணியை முன்னெடுத் திருப்பது—மிகவும் வரவேற்கத் தக்கதாகும். தமிழ் மக்களை அற்ப சலுகைகளாலும், அரை குறைத் தீர்வுகளாலும் திருப்தி யுறச் செய்யவோ, ஏமாற்றவோ முடியாது என்பதனை இடித் துரைக்கும் நிகழ்வாகவும் அது அமைந்தது.

# மணிமண்டபம்

- சித்தன்

நாங்களாகப் போருக்குப் போக வில்லை: இந்தப் போர் எம்மீது திணிக் கப்பட்டுள்ளது; போரைத் தொடர்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை —

இது இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிரான போர் அன்று; விடு தலைப் புலிகளுக்கு மட்டும் எதிரான போர்; தமிழ் மக்கள் வேறு, விடுதலைப் புலிகள் வேறு —

சமாதானத்திற்கான போர் இது, விடுதலைப் புலிகளை வலுவிழக்கச்செய்து, பேச்சு வார்த்தைக்கு அவர்களைச் சம்ம திக்கச் செய்வதற்காகவே இந்தப் போரில் ஈடுபட்டுள்ளோம் —

போரை என்றுமே தொடர்ந்து கொண்டே இருப்பது எமது நோக் கம் அன்று; எவ்வளவு விரைவில் அதை நிறுத்திவிட முடியுமோ அவ்வளவு விரை வில் நிறுத்தி விடுவோம்—

பாதுகாப்பு வரி, மொத்த விற்பனை வரி, உள்ளூரிலும் வெளியூரிலும் 'கிடைக் கும் நன்கொடை'கள் போன்றவற்றைப் பயன்படுத்தி நவீன போராயுதங்களை வாங்கிக் குவித்தும், பெருந்தொகையான வற்றை இலவசமாகப் பெற்றும் தமிழ்ப் பிரதேசங்களில் ''இடி முழக்கம்'' செய்து வரும் அரசு, அந்த முழக்கத்தை நியாயப் படுத்துவதற்காக, நவீன ஊடகங்கள் மூலம் இத்தகைய விளக்கங்களை முழக்கம் செய்து கொண்டும் —வெல்ல முடியாத இந்தப் போரினால், நாட்டு மக்கள் சொல்ல முடி யாத அளவு துன்பங்களுக்கும் துயரங் களுக்கும் இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் உள்ளாகி வருவதைக் கண்டு கவலைப்படா மல் இருக்க முடியவில்லை என்றும் —

போரை உடனடியாக நிறுத்திவிட்டு, சமாதானப் பேச்சு வார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்குச் சர்வதேசச் சமூகம் புலிகளுக்கு வலுவான அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் —

சொல்வதன் மூலம் இந்த நாட்டின் ஜனாதிபதியும் முப்படைகளின் தளபதியு மான சந்திரிகா, போரின் பரம வைரியாக வும் சமாதானத்தின் சகபாடியாகவும்

## ''தனித் தவில்'' வேண்டாம்!

தன்னை அடிக்கடி ''காட்டி''க் கொண் டும் வர—

போர் தொடர்கின்றது—தொடர்ந்து கொண்டே இருக்கின்றது! கோடிக் கணக் கான பணத்தைக் கரியாக்கிக் கொண்டும் தேடக் கிடைக்காத மனித உயிர்களை விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டும் போர் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது!

இந்த நிலையில் —

போரை நிறுத்திவிட்டு, அரசாங்கத் துடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக, போரைத் தவிர்த்துச் சமாதான முறை யில் இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடத் தயாராயிருப்பதாகத் தமது மாவீரர் தினச் செய்தியில் அறிவித்த விடு தலைப் புலிகளின் தலைவர், பேச்சு வார்த் தைக்கான நல்லெண்ணச் சூழலை உரு வாக்கும் வகையில் ஒரு மாத காலம் போர் நிறுத்தத்தைக் கடைப் பிடிக்கும் போவ தாகவும் அறிவித்துவிட்டார்!

யார், தம் மீது போரைத் திணித்த தாக அரசாங்கம் கருதியதோ —

யார் மீது சர்வ தேசச் சமூகம் அழுத் தம் கொடுக்க வேண்டும் என அரசு கோரியதோ —

அந்தத் தலைவரே, அரசுடன் பேசத் தயார் என அறிவித்துவிட்டார்; போர் நிறுத்தம், புலிகளின் பிரசார தந்திரம் எனச் சொல்லி, அரசு அதை ஏற்கமறுத்த போதிலும், திட்டமிட்டுள்ளபடி அதைக் கடைப்பிடிக்கப் போவதாகவும் அறிவித்து விட்டார்!

இந்த நிலையில் —

தானும் போரை உடனடியாக நிறுத்தி விட்டு, பேச்சு வார்த்தையை நடத்தி, இனி எக்காலத்திலும் எவரும் போரை நாடாத அளவுக்கு, இனப்பிரச்சினைக்கு நியாயமான — நிரந்தரமான தீர்வைக் காண முயல்வதுதான் நாகரிகமான ஓர் அரசாங்கம் செய்ய வேண்டிய — செய்யக் கூடிய — செயலாக இருக்கும்!

எதைக் கோருவது எதைக் கொடுப் பது எதைப் பெறுவது, என்பதிற் பிரச் சினைகள் எழலாம், கருத்து வேறுபாடு கள் எழலாம், பேச்சு வார்த்தை நீண்ட காலத்திற்கு நீடிக்கலாம்!

போரை நாடாமல், பேச்சு வார்த்தை மூலந்தான் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம் என்பதில் உறுதி இருந்தால் இன்றில்லாவிட்டால் நாளைக்கோ, நாளைக்கு இல்லாவிட்டால் நாளை மறு நாளோ உடன்பாடு ஒன்றை அடைந்தே தீரலாம்!

இதைத்தான் எல்லோரும் எதிர்பார்க் கிறார்கள்: விரும்புகின்றார்கள்.

இனப் பிரச்சினையில் 'எதிரும் புதிரு' மாக இருக்கின்ற தமிழ் சிங்கள மக்கள் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், நியாய புத்தி படைத்த சிங்களத் தலைவர்கள், இந்த நாட்டின் முன்னேற்றத்தில் உண்மையான அக்கறை கொண்டுள்ள வெளிநாட்டினர், முதலிய எல்லோருமே இதைத்தான் எதிர் பார்க்கின்றார்கள் விரும்புகின்றார்கள்!

ஆனால் —

போர் முனையிலே தோல்விக்கு மேல் தோல்வியைத் தழுவிக் கொள்ளும் புலிகள்— ஆள் பற்றாக் குறையினால் அவதிப்படும் புலிகள்—தம்மை மீண்டும் பலப்படுத்திக் கொள்வதற்காகவே போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளார்கள். அவர்களை நம்ப முடியாது, அவர்களுக்கு எதிரான போரை உக்கிரப்படுத்திக் கொண்டே பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடுவோம் —

என்கின்றார்கள், தமிழ் மக்களை ஏமாற்றுவதில், 'வரலாற்றுப் புகழ்' படைத்த பேரினவாதத்தின் இன்றைய வாரிசுகளான சில ''அரிச்சந்திர''த் தலைவர்கள்!

அதனால் —

போர் தொடர்கின்றது— ஒரு தலைப் பட்சமாகத் தொடர்கின்றது — தமிழ் மக் களின் உயிரையும் உடைமைகளையும் அழித்து ஒழித்துக்கொண்டே தொடர் கின்றது!

''சமாதானத்திற்கான'' போர்—இனி, ''பேச்சு வார்த்தைக்கான'' போர் ஆகி— ''தீர்வை ஏற்றுக்கொள்ளச் செய்வதற் கான'' போர் ஆகி—'தீர்வை நடைமுறைப் படுத்துவதற்கான' போர் ஆகி — தொடர்ந்து கொண்டே இருக்கும்!

இந்த நிலையில் —

போரை உடனடியாக நிறுத்தி, சமா தான முறையில் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்போம் என்ற வாக்குறுதியுடன் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதிகள் என்ன செய் யப் போகின்றார்கள்?

ஒற்றுமையே பலம் என்பதை உணர்ந்து ஒரே அணியிலே திரண்டு அரசுக்கு அழுத் தம் கொடுக்க வேண்டும்.

உலகத் தலைவர்களை நேரிலே சந் தித்து, அரசை ஆட்டிப் படைக்கும் சிலரின் கபடத்தையும், நரித் தந்திரத்தையும் அந்த ரங்க ''ஆசை''யையும் உரத்த குரலில்— ஒரே குரலில் — அம்பலப்படுத்தி, தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டை வலியுறுத்த வேண்டும்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத கட்சிகள் இதுவிடயத்தில்நாட்டம்செலுத்த ஆரம்பித்துள்ளன என்ற தகவல் சற்றுத் திருப்தி தருகிறது. பேச்சுக்காக இவ்வாறு கூறிவிட்டுப் பின்னர் ''தனித் தவில்'' வாசித்து ''பக்ஸ்'' செய்தி அனுப்பிக் கொண்டிருக்கக் கூடாது! கூட்டு முயற்சி தொடரட்டும்.!!

## நாளை

மார்கழி 17

திங்கட்கிழமை

திதி: ஷஷ்டி

முற்பகல் 10.31 வரை

நட்சத்திரம்: பூரட்டாதி

முன்இரவு 7.04 வரை.

சுபநேரம்: 12 29-01.59

ராகுகாலம்: 07 59 09.29

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தவறணையை அகற்ற கோரிக்கை

சுன்னாகம் பண்டிதர் மாணிக்கத் தியாகராசா வீதி யில் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைக்கப்பட் டுள்ள பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் கள் ளுத் தவறணையை அகற்று மாறு அப்பகுதி மக்கள் வலி. தெற்கு பிரதேச சபை உப தலைவர் க. நவநீதனிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தத் தவறணையில் மது அருந்துபவர்கள் அநாகரிக மாக நடந்து கொள்ளதாக வும் —

வீதியால் செல்லும் பொது மக்கள் இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் இப்பகுதி மக்கள் கையெழுத்திட்டு வழங்கிய மகஜரின் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-27)

### உதயவாக்கு

தோல்வியைக் கண்டு அஞ் சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள் கிறது.

-அரவிந்தர்.

## முன்பள்ளிக்கு தளபாடம்

சுன்னாகம், டிசெ. 31

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினர் இப்பகுதியில் உள்ள முன்பள்ளிகளுக்கு தள பாடங்களை வழங்கவுள்ள னர்.

இப்பகுதியில் உள்ள பதிவு செய்யப்பட்ட 43 முன்பள்ளி களில் போதிய மேசை, வாங்குகள் இல்லாத பள்ளி களுக்கே இவை வழங்கப்பட வுள்ளன.

வடக்கு புனர்வாழ்வு, புன ரமைப்பு அதிகார சபையால் பிரதேச சபைக்கு ஒதுக்கப் பட்ட நிதியில் இருந்து, இதற்கென பிரதேச சபை 6 இலட்சம் ரூபாவைச் செல விட்டுள்ளது.

மிக விரைவில் இவை முன் பள்ளிகளுக்கு வழங்கப்படு மென பிரதேச சபை உப தலைவர் க. நவநீதன் தெரி வித்தார்.

(இ-27)

## புல் பிடுங்க வந்து பயிர்களை அறுக்கும் மோசடி

வலிகாமம் மேற்கு, டிசெ. 31

சுழிபுரம் மேற்கு, தொல் புரம் மேற்கு ஆகிய இடங் களில் உள்ள வயல்களில் புல் பிடுங்க வருபவர்கள் நெற் கதிர்களையும் பயிர்களையும் அறுத்துச் செல்கின்றனர் என்று விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகனி டம் இது தொடர்பாக முறை யிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கடும் நட வடிக்கை எடுக்குமாறு பிர தேச செயலர் கிராம உத்தி யோகத்தர்களைப் பணித்துள் ளார்.

(இ-175)

## வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

அனலைதீவு ஐயனார் கோயிலுக்கு செல்லும் பாதை பொதுமக்களின் ஒத்துழைப் புடன் கிறவல் மண்போட்டு திருத்தப்பட்டுள்ளது.

பல வருடங்களாக திருத் தப்படாமல் இருந்த இப் பாதையால் பயணம் செய் யும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட போதும் நீண்ட காலமாக இந்தப் பாதையைத் திருத்த எவரும் முன்வரவில்லை.

இதனையடுத்து அனலை தீவு கிராம முன்னேற்றச் சங்கம் பொதுமக்களினதும், ஏனைய அமைப்புகளதும் ஆதரவுடன் சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் நீளமான அந்த வீதியை கிறவல் மண் போட்டு செப்பனிட்டுள்ள னர்.

(ம-6-29)

## ஆயுள்வேத ஆஸ்பத்திரி அமைப்பு

தென்மராட்சி, டிசெ-31

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குடத்தனைப்பகுதியில் ஆயுள் வேத வைத்தியசாலையினை அடுத்த வருடத்தில் (2001) அமைக்க நடவடிக்கை மேற் கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச சபை உப தலைவர் ப. இரவீந்திரன் நேற்றுமுன் தினம் நடைபெற்ற மாதாந் தக் கூட்டத்தில் பிரேரணை ஒன்றினை சமர்ப்பித்தார்.

இப் பிரேரணையை அனைத்து உறுப்பினர்களும் ஆதரித்தால் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற் கொள்வதாக பிரதேச சபை தலைவர் இ. ஸ்ரீரங்கேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

(இ-117)

## வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை (RRAN)

# யாழ். குடாநாட்டில் கப்பல், விமானப் பயணச் சீட்டுக்களை வழங்குவதற்குப் புதிய அலுவலகம்

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பல், விமானம் மூலம் பயணம் செய்வதற்கான பயணச் சீட்டுக்களை வழங்கும் பணி புதிய நிர்வாகத்தின் கீழ் புதிய நடைமுறைகளுடன் தொடரப்படவுள்ளதாக வடக்குப் புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதுவரை காலமாக பயணச் சீட்டுகள் வழங்குவதில் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கின் தமிழர் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு விடுத்த முறையீட்டினை அடுத்து பயணச் சீட்டுக்கள் வழங்குவதில் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளதுடன் புதிய நடைமுறைகளும் அமுல்படுத்தவுள்ளது.

பயணச் சீட்டுக்கள் வழங்குவதற்கான புதிய அலுவலகம் குடாநாட்டில் ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடியில் உள்ள மணியம் கட்டடத்தில் இயங்கி வரும்.

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் அலுவலகத்தினர் பயணச் சீட்டுக்கள் வழங்குவதில் அமுல்படுத்தப்படவுள்ள புதிய நடைமுறைகள் குறித்து மக்களுக்கு பின்வரும் அறிவுறுத்தல்களை விடுக்க விரும்புகிறோம்.

### 1. பாதுகாப்பு அனுமதி பெறல்

வழமை போல் பாதுகாப்பு அனுமதி பெறப்படல் வேண்டும். இராணுவ சிவில் அலுவலத்தினரால் இவ்வாறு பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களின் விவரம் பயணச் சீட்டு வழங்கும் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதும் மக்களின் பார்வைக்காக இவ்விவரம் பயணச்சீட்டு வழங்கும் அலுவலகம் உட்பட சகல பிரதேச செயலாளர் அலுவலகங்கள், உள்ளூராட்சி சபை அலுவலகங்கள் ஆகியவற்றில் வைக்கப்படும்.

### 2. பயணச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளல் முன் கூட்டிய ஆசனப்பதிவு கப்பல்/விமானம்

★ பாதுகாப்பு அனுமதி பெற்றுக் கொண்டோர் கப்பலில் அல்லது விமானத்தில் பயணம் செய்ய முன் கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

★ அதற்கு ஏற்ப பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொண்டதிற்கான பற்றுச் சீட்டினை பயண அனுமதிக்கான பயணச் சீட்டு வழங்கும் அலுவலகத்தில் ஒப்படைத்து தமது பயணத்திற்கான ஒழுங்குகளை சீர்செய்து கொள்ள வேண்டும்.

★ பயணச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்வோர் தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை மூலம் தங்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

★ குடும்பமாகப் பயணம் செல்பவர்கள், பிரயாணச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பாதுகாப்பு அனுமதி விவர திரவில் பெயர் உள்ள குடும்ப அங்கத்தவர் ஒருவர், ஏனையோரது அடையாள அட்டைகளுடன் வந்து பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### 3. முன்னுரிமை

பயணிகளின் அவசரப் பயணம் கருதி, முன்னுரிமை அடிப்படையில் பயணச் சீட்டுக்கள் வழங்வகுதில் முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மரண வீடுகளுக்குச் செல்வோர், நோயாளர்கள், நேர்முகப் பரீட்சைக்கு வடக்கிற்கு வெளியே பயணம் மேற்கொள்ள வேண்டியவர்கள், அரச ஊழியர்கள், பொருள்கள் கொள்முதல் செய்ய கொழும்பு சென்று வரும் வர்த்தகர்கள், வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோர்கள், உள்ளூர், வெளியூர் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வோர் மற்றும் பொது ஸ்தாபனங்கள் தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து முன்னுரிமை அடிப்படையில் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மேற்படி பயணச் சீட்டுக்கள் வழங்குவது தொடர்பாக மக்கள் தங்கள் கருத்துக்கள் மற்றும் புகார்களை, பயணச்சீட்டு வழங்கும் அலுவலகத்தில் உள்ளமுறைப்பாட்டுப் பெட்டியில் சமர்ப்பித்துக் கொள்ளலாம். பயணச் சீட்டுக்கள் வழங்கும் பணிக்கு மக்களை ஒத்துழைக்கும் படியும் வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை கேட்டுக் கொள்கிறது.

**தலைவர்,**
**ஆர். ஆர். ஏ. என்.**
**வடக்கின் மீள் குடியேற்ற**
**புனரமைப்பு அதிகார சபை,**
**16/3, கேம்பிறிஜ் பிளேஸ், கொழும்பு - 7.**

27—12—2000

(சி/14500)

## மிதிவெடிகளை அகற்றுமாறு கோரிக்கை

சுன்னாகம், டிசெ. 31

சுன்னாகம் தெற்கு கிராம சேவகர் பிரிவில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி தமது வாழ்விடங்களைப் புனரமைக்க வழி செய்யுமாறு இப்பகுதி மக்கள் சுன்னாகம் இராணுவ சிவில் நிர்வாக அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு முதல் மிதிவெடிகள் புதைக்கப்பட்டும், மண் அரன்களால் பிரிக்கப்பட்டும் உள்ள தமது காணிகளையும், இடிந்தும், சேதமடைந்தும் உள்ள வீடுகளையும் புனரமைக்க வசதியாக இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி உதவுமாறு அவர்கள் கோரி உள்ளனர். (ம-27)

## நீரிழிவு நோய் மாத்திரைக்குத் தட்டுப்பாடு

சுன்னாகம், டிசெ. 31

நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தும் 'டயனில்' என்ற மாத்திரை யாழ். ஆஸ்பத்திரியில் வழங்கப்படுவதில்லை என நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றை வெளிக்கடைகளில் அதிகவிலை கொடுத்தே வாங்க நேரிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — மெற்பொமின், 'நஸ்டினோன்' முதலிய மாத்திரைகளும் குறைந்த அளவே வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ம—27)

## உடுவிலில் திருட்டுக்கள் அதிகரிப்பு

சுன்னாகம், டிசெ. 31

உடுவில் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த வாரம் இப்பகுதியில் ஒருவீட்டில் கோழிகள் திருடப்பட்டுள்ளன, இரு வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி, வீட்டில் இருந்தவர்கள் விழித்ததனால் முறியடிக்கப்பட்டது.

இதேவேளை —

இப்பதியில் சில வீட்டு நாய்கள் நஞ்சூட்டப்பட்டதால் இறந்துள்ளன. திருடர்களே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-27)

## துப்பாக்கி வெடித்து சிப்பாய் காயம்

யாழ்ப்பணம், டிசெ.31

பஸ்மூலம் அழைத்துச் செல்லப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி வெடித்ததில் சிப்பாய் காலில் காயமடைந்தார்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு அண்மையில் கடந்த புதன் காலை11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது இரு பஸ்களில் ஏற்றி வரப்பட்ட சிப்பாய்களில் ஒருவர் காயம் அடைந்தவர் ஆவார். (இ-6)

## கொக்குவில் பகுதியில் சுற்றிவளைப்பு

வலி. வடக்கு, டிசெ 31

நேற்று முன்தினம் அதிகாலை முதல் கொக்குவில் கிழக்கு பிரம்படி, தலையாளிப் பகுதிகள் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டன.

வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர் வீடுகளை சோதனையிட்டுச் சென்றனர்.

இதே நேரம் அப்பகுதியில் ஒலிபரப்பி மூலம் புதியவர்கள் அப்பகுதியில் இருந்தால் அவர்கள் பற்றிய விவரங்களை அறிவிக்குமாறு கோரப்பட்டது. (இ 86)

## முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழி ஆறுமாதப் பயிற்சி, க. பொ. த. சாதாரணதரம் கடைசித் தகைமை.

விவரங்களுக்கு:-

பாலர் ஆசிரியர் சங்கம்,
கொக்குவில். (82005)

## பதவி வெற்றிடங்கள்

### நகரப் பாதுகாப்புச் சேவை
பருத்தித்துறை

தகைமைகள்:-

★ வயது எல்லை 25 வருடங்கள் தொடக்கம் 50 வருடங்களுக்குள் இருத்தல் வேண்டும்.

★ நகரசபை எல்லைக்குள்ளும் அதனை அண்டிய பகுதிகளிலும் நிரந்தர வதிவிடம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரங்களைத் தாமே தயாரித்து, பூர்த்திசெய்து, பொறுப்பதிகாரி நகர பாதுகாப்புச் சேவை, பருத்தித்துறை என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 10-01-2001 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கவும்.

— பொறுப்பதிகாரி.

(சி/14552)

## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

### நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி 2001 ஆம் ஆண்டு மாலை 4. 30 மணியளவில் சங்கிலியன் மன்றப் படிப்பக மனையில் உள்ளூராட்சி அமைப்பு அதிகாரிகளின் முன்னிலையில் தலைவர் தி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் மன்ற முன்னேற்றத்திற்கு உழைத்தவர்கள் எல்லோரும் வருகை தந்து இப்பொதுக் கூட்டத்தில் கலந்து புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதில் ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

அங்கத்தவர்களாக விரும்புவோர் தலைவருடன் தொடர்பு கொள்வதுடன் பிரேரணைகளை 15—01—2001 - க்கு முன் தலைவர் திரு. தி. ஸ்ரீஸ்கந்தராசா, இல. 10, இராச வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தி. ஸ்ரீஸ்கந்தராசா
தலைவர்
சங்கிலியன் மன்றம்.

நல்லூர்.
(82311)

## நினைவினில் நான்காண்டுகள்

மலர்வு 1931 — 02 — 05



உதிர்வு 1996 — 12 — 16

### அமரர் வி. எஸ். குணசிங்கம்
(ஓய்வுபெற்ற எழுதுநரும், முன்னாள் கூ.ஊ.தொ.ச. நிர்வாகச் செயலாளரும்)

திதி: 31 — 12 — 2000

அப்பா!
உங்களின் உரத்த குரலும்
உறுதியான பார்வையும் — இன்றும்
நினைவுகளுக்குள் விம்மல்களாக ......... ஆனால்
என்றும் அவை எமக்குள் நின்று — எம்மை
வழிநடத்தும் பிரசன்னங்களாகத்தான் ........

உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

16, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (82317)

# புத்தாயிரத்தின் முதல் ஆண்டில் உலக அரங்கில் ஒரு பார்வை

## ஜனவரி

□ உலகெங்கிலும் கணனிகளை 2 கே சிக்கலால் பாதிப்படையாமல் தப்பின.

□ உலகின் உயரமான சிலையாகக் கருதப்படும் 133 அடி திருவள்ளுவர் சிலை இந்தியாவின் கன்னியா குமரிக் கடலில் திறந்து வைக்கப்பட்டது.

□ ரஷ்ய அதிபர் யெல்ட்சின் பதவி விலகினார்.

□ ஜெர்மனியில் 31.12.99 நள்ளிரவு 11.56க்கும், 1.1.2000 அதிகாலை 12.02க்கும் - இரு நூற்றாண்டுகளில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.



சென்ற நூற்றாண்டின் இறுதியில் மனித குலத்தைப் பயமுறுத்திய 'எய்ட்ஸ்' மிலேனியத்திலும் அச்சுறுத்தலைத் தொடர்கிறது. சிம்பாப்வேயில் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்ட 9 வயதுச் சிறுமிகள் இருவர் பராமரிப்பு நிலையத்தில் அமர்ந்திருக்கும் பரிதாபம்.

□ 14 வயதான திபெத்திய ஆன்மீகத் தலைவர் ஹர்மபாலாமா சீனக் கட்டுப்பாட்டில் இருந்து தப்பி இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

□ திராவிடத் தலைவர்களில் ஒருவரான நாவலர் நெடுஞ்செழியன் காலமானார்.

□ செச்சினியா மீதான ரஷ்யத் தாக்குதல் தொடர்ந்தது.

## பெப்ரவரி

□ அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு ஊழல் வழக்கில் ஒருவருடக் கடுங்காவல் தண்டனை விதிப்பு.

□ வட அயர்லாந்தில் 'புனித வெள்ளி' ஒப்பந்தம் கைவிடப்பட்டு மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது.

□ பிரிட்டனில் சட்டமூலங்களுக்குக் கைப்படக் கையெழுத்திடும் பரம்பரை வழக்கத்தை எலிசபெத் மகாராணி கைவிட்டு கணனி மூலம் ஒப்புதல் அளிக்கத் தொடங்கினார்.

□ ஈரானியத் தேர்தலில் சீர்திருத்தவாதிகள் அமோக வெற்றி.

□ செச்சினியத் தலைநகர் குரோஸ்னியை ரஷ்யப் படைகள் கைப்பற்றின. குரோஸ்னியர்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

## மார்ச்

□ அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் இந்தியா விஜயம்.

□ விளாடிமிர் புடின் ரஷ்ய அதிபரானார்.

□ மூலிகைப் பெற்றோல் தயாரிப்பதாகக் கூறி மோசடி செய்ததாக ராமர்பிள்ளை கைதானார்.

□ சொர்க்கத்துக்குச் செல்வதற்காக உகண்டாவில் தேவாலயத்துக்குள் 400 பேர் கூட்டாகத் தற்கொலை.

□ இலங்கை அரசுக்கு உதவும் கிளின்ரன் நிர்வாகத்தைக் கண்டித்து சென்னையில் இயங்கும் அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஈழ ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்.

□ இந்தியாவில் தொடர்ந்து21 மணி நேரம் தபேலா வாசித்து விங்கு ஆதர்ஷ் என்பவர் உலகசாதனை.

## ஏப்ரல்

□ பதவி கவிழ்க்கப்பட்ட பாகிஸ் தானியப் பிரதமர் நவாஸ்ஷெரீப்புக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

□ கியூபாச் சிறுவன் எலியன் அமெரிக்காவில் இருந்து கியூபாவில் உள்ள தந்தையிடம் அனுப்பப்பட்டான். எலியனை கியூபாவுக்கு அனுப்புவது குறித்த விடயம் இரு நாடுகளிடையேயும் கௌரவப் பிரச்சினையாகக் கருதப்பட்டது.

□ ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கபட்டிருந்த நளினிக்கு அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

## மே

□ விண்ணில் செவ்வாய், வியாழன், புதன், வெள்ளி, சனி ஆகிய 5 கோள்களும் ஒரேவரிசையில் அபூர்வமாகக் காட்சியளித்தன.

□ 'லவ்பக்' கணனிவைரஸ் வெள்ளை மாளிகை உட்பட பல முக்கிய கேந்திரங்களையும் கலங்கடித்தது.

□ இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை மேலும் 2 ஆண்டுகள் நீடிக்கப்பட்டது.

□ பிஜியில் பிரதமர் மகேந்திர சௌத்திரியும், அமைச்சர்களும் கிளர்ச்சியாளர்களால் நாடாளுமன்றக் கட்டடத்தில் பணயம் வைக்கப்பட்டனர்.

□ 84ஆம் ஆண்டு மீனம்பாக்கம் விமான நிலையக் குண்டுவெடிப்பு வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவர்களை நீதிமன்றம் விடுவித்தது.

## ஜூன்

□ மொரோக்கோ மன்னர் அபுசாயப் காலமானார்.

□ ஜெனீவாவில் ஐ.நா.சபைத் தலைமையகம் முன்பாக ஈழத் தமிழ் அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தின.

□ தமிழ்த் திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் காலமானார்.

## ஜூலை

□ ஒலியை விட வேகமான 'கொன்கோட்' விமானம் விபத்துக்குள்ளாகியதில் 113பேர் பலியானார்கள்.

□ அரபாத்-பராக் பங்குபற்றிய மேற்காசியப் பிரச்சினை குறித்து காம்ப்டேவிட் பேச்சுவார்த்தை அமெரிக்காவில் நடந்து தோல்வியில் முடிந்தது.

□ இலங்கையில் இருந்து அகதியாக இந்தியா சென்ற குமுதினி என்ற பெண் தமிழக மீனவர்களால் கடத்திச் சென்று கொல்லப்பட்டார்.

□ இஸ்ரேலில் ஊழல் குற்றஞ் சாட்டப்பட்ட அதிபர் எசர்வைஸ்மேன் பதவி விலகினார்.

□ காஷ்மீரில் ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் ஒருதரப்பாக யுத்த நிறுத்தம் அறிவித்தனர்.

□ தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவராக விஜயகாந்த் பதவியேற்றார்.

## ஓகஸ்ட்

□ இந்தியாவில் மூத்த கன்னட நடிகர் ராஜ்குமார் உட்பட 4பேரைச் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கடத்திச் சென்றான்.

□ தி.மு.க.வின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான நாஞ்சில் மனோகரன் சென்னையில் காலமானார்.

□ இந்தியாவில் தங்கள் மீதான தடையை நீடிக்கக் கூடாது என்பதற்கான காரணங்களைத் தரும்படி விடுதலைப் புலிகளுக்கு சிறப்பு நீதிமன்றம் கடிதம் அனுப்பியது.

□ ஓரினச் சேர்க்கைக் குற்றச் சாட்டில் மலேசியத் துணைஅதிபர் அன்வர் இப்ராஹிமுக்கு 9 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

□ காஷ்மீரில் ஒரு தரப்பான தாக்குதல் நிறுத்தத்தை ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் முடித்துக்கொண்டனர்.

□ இலங்கைப் பிரச்சினைக்கு செக்கோஸ்லேவேக்கியா பாணியில் இருநாடுகளாகப் பிரித்து தீர்வு காண வேண்டும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

□ ரஷ்ய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான 'திகுர்ஸ்க்' பாஸ்ரன் கடலின் அடியில் விபத்தில் சிக்கியதில் அதிலிருந்த 118பேரும் உயிரிழந்தனர்.

□ கொரியப் பிரிவினையின்போது பிரிந்த குடும்பங்கள் 50 ஆண்டுகளின் பின்னர் சந்தித்தன.

□ ஐரோப்பாவில் உயரமான கோபுரமாகக் கருதப்படும் ரஷ்யாவின் 'ஒஸ்டான்கினோ' தொலைக்காட்சிக் கோபுரத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

## செப்ரெம்பர்

□ புத்தாயிரமாண்டின் முதல் ஐ.நா. உச்சி மாநாடு அமெரிக்காவில் நடைபெற்றது.

□ ஜேர்மனியில் நாடு கடத்தலை ஆட்சேபித்து 4 ஈழத்தமிழர்கள் உண்ணாவிரதம்.

□ சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இடம்பெற்றன.

□ மேற்குக்கரை மற்றும் காஸா பிரதேசங்களில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே மோதல்கள் தொடங்கித் தொடர்கின்றன.

□ பலஸ்தீனத் தனிநாடு பிரகடனத்தை யசீர் அராபத் ஒத்திவைத்தார்.

## ஒக்ரோபர்

□ ஜேர்மனியில் நாடு கடத்தலை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்த ஈழத்தமிழர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

□ 'டான்சி' நிலப்பேர வழக்கில் ஜெயலலிதாவுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதால், அடுத்த 6 ஆண்டுகளுக்கு அவர் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்தார்.



இந்த வருடத்தின் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற தென்கொரிய ஜனாதிபதி கிம் டே ஜுங்.

□ ஆட்சியைக் காப்பாற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுத்த வழக்கில் முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு 3 வருடக் கடுழியச்சிறை விதிக்கப்பட்டது.

□ இந்திய காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி காலமானார்.

□ 24 வருடங்களாகப் பதவியிலிருந்த மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு பதவி விலகினார்.

## நவம்பர்

□ ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப் பேசியது, இந்திய அரசியலில் சர்ச்சையை உருவாக்கியது.

□ அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் வியட்நாமுக்கு விஜயம் செய்தார். யுத்தத்தின் பின்னர் அங்கு சென்ற முதல் அமெரிக்க அதிபர் இவராவார்.

□ கன்னட நடிகர் ராஜ்குமார் 108 நாள்களின் பின்னர் வீரப்பனால் விடுதலை செய்யப்பட்டார்.

□ அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது.

## டிசெம்பர்

□ பாகிஸ்தானில் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் நவாஸ் ஷெரீப்பை இராணுவ அரசு விடுவித்து சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்தது.

□ சீனாவில் நடன அரங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் 309 பேர் உயிரிழந்தனர்.

□ நீண்ட நாள்கள் இழுபறியின் பின்னர் அமெரிக்காவின் 43ஆவது அதிபரானார் ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ்.

□ நேபாளத்தில் இந்தியர்களுக்கு எதிரான வன்முறைக் கலவரம் பரவியது.

★

### அழகிகளால் பெருமை

மிலேனியத்தின் முதல் ஆண்டு இந்திய அழகிகளுக்கு அதிர்ஷ்டத்தை அள்ளித் தந்தது.

ஆண்டின் தொடக்கத்தில் இந்திய அழகி லாராதத்தா 'மிஸ் யூனிவேர்ஸ்' அழகுராணிப் போட்டியில் வென்று மகுடம் சூடிக்கொண்டார்.

ஆண்டின் இறுதியில் மற்றொரு இந்திய அழகியான பிரியங்கா சோப்ரா 'மிஸ்வேர்ல்ட்' அழகு ராணிப் போட்டியில் பட்டம் வென்றார்.

இதன் பின்னர் நடைபெற்ற மிஸ் ஆசியா பசுபிக் அழகுராணிப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த தியாமிர்தா ஜெயித்தார் போதாக்குறைக்கு, சர்வதேச ரீதியில் திருமணமான பெண்கள் பங்குபற்றும் 'மிஸிஸ் வேர்ல்ட்' போட்டியில் இந்தியாவின் திருமதி அவிதி கோபித்கர் அழகுராணியானார்.

ஆக சென்ற ஆண்டில் சர்வதேச ரீதியில் நடத்தப்படும் மதிப்புமிக்க அழகுராணிப் பட்டங்கள் அனைத்தையும் இந்திய அழகிகளே கவிகரித்து தமது நாட்டை சாதனைபுரிய வைத்துள்ளனர்.

---

# புலிகளின் அறிவிப்புக்கு பதில் சொல்லவேண்டிய சுமையுடன் நாடு திரும்பியுள்ளார் ஜனாதிபதி

கடந்த ஞாயிறு நள்ளிரவுமுதல் புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம் தென் இலங்கை அரசியல் வட்டாரங்களில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. புலிகளின் அதிர்ச்சி வைத்தியமாக சுட்டிக் காட்டப்பட்ட மேற்படி யுத்தநிறுத்த அறிவிப்பு பேரினவாதிகளின் நிலைப்பாட்டுக்கு விடுத்த சவாலாகவே அமைந்துவிட்டது.

### கொழும்பு மடல்

பாரிஸ் உதவிக்குழு மாநாட்டில் இலங்கை அரசு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறாத நிலையில் குழம்பிப்போயிருந்த அரசாங்க வட்டாரங்களை புலிகளின் அரசியல் சாணக்கியம் மிக்க யுத்தநிறுத்த அறிவிப்பு மேலும் குழப்பமடையச் செய்திருக்கும் என்பது உண்மை.

அரசாங்கத் தரப்பு எவ்விதத்திலும் எதிர்பார்த்திராத நிலையில் வந்த இந்த யுத்தநிறுத்த அறிவித்தலை அடுத்து சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் தத்தமது வாய்க்கு வந்தபடி எதை எதையோ உளறத் தொடங்கினர். மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்ட மறுகணமே கருத்துத் தெரிவித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தே, புலிகளின் யுத்தநிறுத்த பொறியில் நாம் விழப் போவதில்லை எனவும் யுத்தம் தொடரும் எனவும் சுட்டிக்காட்டி இருந்தார்.

### பிரதமரின் நழுவல் போக்கு

இதற்கிடையில் ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள நிலையில் நாட்டின் தலைமைப் பதவியில் இருந்த பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்புத் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் நழுவும் போக்கைக் கடைப்பிடித்திருப்பதோடு புலிகள் ஊடகங்களுக்கே யுத்தநிறுத்த விவகாரங்களை அறிவித்துள்ளார்கள் எனவும் அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கத் தவறிவிட்டார்கள் எனவும் எவ்வாறாயினும் யுத்தம் தொடரும் என்பதையே என்னால் சொல்லமுடியும் எனவும் தெரிவித்திருந்தார். அதன் மூலம் அவர் நழுவிக்கொண்டதும் இனிவரும் காலங்களில் சர்வதேச ரீதியாக விடுக்கப்படும் அழுத்தங்கள் காரணமாக அவரால் நழுவமுடியாது இருக்கும்.

இதற்கிடையில் இந்த யுத்த

### நழுவல் போக்கை விடுத்து உறுதியான முடிவை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம்

நிறுத்த அறிவிப்பு தொடர்பாக கருத்துத் தெரிவித்த தொடர்பு சாதன அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை தாம் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பாக உத்தியோகபூர்வமான பதில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை தமது லண்டன் அலுவலகத்தின் ஊடாக யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்த புலிகள் விவசாயத்துறை அமைச்சர் டி.எம்.ஜெயரத்னவுக்கும் 'பக்ஸ்' மூலம் அதனை அறிவித்திருந்தார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அந்த 'பக்ஸ்' செய்தி தொடர்பான மேலதிக தகவல் எதனையும் தன்னால் சொல்லமுடியாது எனவும் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பு சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நல்லதொரு சகுனம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிலையில் பிரான்ஸில தங்கி இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மற்றும் வெளிநாட்டு அமைச்சர் போன்றோருடன் தொலைபேசி மூலம் கலந்துரையாடி பின்னர் அரசின் நிலைப்பாட்டை தனது செயலாளர் மூலம் அறிவித்திருந்தார். அரசு பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைத்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதன் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு படிப்படியாக யுத்தநிறுத்தம் தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். இதன்படி பார்க்கும்போது பிரதமரைப்போலவே ஜனாதிபதியும் நழுவும் போக்கை கடைப்பிடித்திருக்கிறார் என்றே எண்ணத் தூண்டுகிறது.

*ராகவன்*

எவ்வாறாயினும் கடந்த வியாழன் மாலை நாடுதிரும்பிய ஜனாதிபதி வெளிநாட்டு உதவிகள் எதையும் பெறமுடியாத நிலையிலே நாடு திரும்பி இருக்கிறார் போல் தெரிகிறது. அதைப்போலவே, புலிகளின் யுத்தநிறுத்தம் தொடர்பாக அரசின் நேரடி நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டிய நிலையிலே அவர் நாடு திரும்பி இருக்கிறார். அந்த வகை

(13ஆம் பக்கம் பார்க்க)

# பொருள்களின் விலை அதிகரிப்பு மக்களை அநாதைகளாக்குகிறது

## ஜே. வி. பி. கட்சி கண்டனம்

கொழும்பு,டிசெ.31

ஓரளவுக்கேனும் தமது வாழ்வை நடத்திக்கொண்டிருந்த மக்கள் தற்போது உண்ண உணவின்றி சாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சூறாவளியால் ஒருலட்சம்பேர் அநாதைகளாகியுள்ளனர். அரசு தற்போது மேற்கொண்டுள்ள பொருள்கள விலையேற்றத்தால் எவ்வளவுபேர் அநாதைகளாகப் போகிறார்கள் என்பதை எவரும் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

எரிபொருள்கள் விலை அதிகரிப்புத் தொடர்பாக ஜே.வி.பி. இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி விடுத்த அறிக்கையில் -

அமெரிக்க டொலர் மீதான இலங்கை ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டதன் விளைவாக அரசு எரிபொருள்களுக்கான விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளது. நான்காவது தடவையாக அரசு இந்த விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளது.

கடந்த 23 வருடங்களாக இப்படிப்பட்ட கொள்ளைக்கார பொருளாதார அரசியல்வாதிகளின் கட்டாய கொடுமைகளுக்கு மக்கள் முகம் கொடுத்துவருகின்றனர்.

சாப்பாட்டுக்கே வழியின்றி மக்கள் செத்துப்போகட்டும் என்பதே அரசின் 'புதுவருடச் செய்தி' ஆகியுள்ளது. அதிக அளவில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட அரசை நடத்துவதற்கான செலவை மக்களின் முதுகில் சுமத்துகிறார்கள்.

இந்த நிலையில் ஏனைய பாவனைப் பொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படுவதையும் தடுக்க முடியாது. பசிப்பிணி, பொருளாதாரப் பாதிப்பு ஆகியவற்றுக்கு எதிராக மக்கள் போராட்டத்தின் உச்சநிலையை அடைவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு எம்மால் நிரந்தரத்தீர்வு ஒன்றைக்காண முடியும்- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

## சட்டத்தரணிகள் ஆஜராகவில்லை

வடமராட்சி,டிசெ.31

மிருசுவில் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் தொடர்பான மரணவிசாரணையின்போது மரணமானவர்களின் குடும்பத்தினரது நலன்களைக் கவனிக்க சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களான கிருஷாந்தி கொலை, செம்மணி, அரியாலை மனிதப் புதைகுழிகள் போன்ற சம்பவங்களின் மரண மற்றும் விசாரணைகளுக்கு இறந்தோர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு பல சட்டத்தரணிகள் ஆஜராகி வாதிட்டனர்.

ஆனால் மிருசுவில் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் தொடர்பாக இறந்தோர்களின் நலன்களைக் கவனிக்கவோ சாட்சியங்களுக்கு உறுதுணையாக இருக்கவோ சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இப்படுகொலைகள் தொடர்பான மரணவிசாரணை கடந்த இரு தினங்களாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. (ஐ-173)

## வெள்ளத்தில் மூழ்கிப் பலி

வந்தாறுமூலையில் உள்ள தமது வயலுக்கு நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்குச் சென்ற ஆறு பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் யோகராசா(வயது35) என்பவர் வெள்ளத்தில் மூழ்கி மரணமானார்.

பேரில்லாவெளியைச் சேர்ந்த இவர் வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து மாவடிவேம்பில் வசித்துவந்தார். (ஐ-3-21)

## நிமலராஜன் கொலை விசாரணை:
# வங்கிக் கணக்கைப் பரிசீலிக்க பொலீஸ் குழு அனுமதி கோரியது

யாழ்ப்பாணம், டிசெ.31

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட விசாரணைக் குழு ஒன்றை யாழ். பொலீஸார் அமைத்துள்ளனர்.

இந்த விசாரணைக்குழு தமது விசாரணையின் பொருட்டு யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் உள்ள நிமலராஜனின் வங்கிக் கணக்கினை (கணக்கு இலக்கம் 25388) பரிசீலனை செய்வதற்கான அனுமதியை யாழ். நீதிவானிடம் கோரியுள்ளது.

2000 மார்ச் முதலாம் திகதியிலிருந்து 2000 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரையான கணக்குகளே பரிசீலனை செய்யப்படும். என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பொலீஸாரின் விண்ணப்பத்தினை ஏற்றுக் கொண்ட நீதிவான் இதற்கான அனுமதியை வழங்கினார். (ஐ-5-6)

# காரைநகரில் 5 ஆண்டுகளில் 20 ஆயிரம் பனைகள் அழிப்பு

காரைநகர், டிசெ.31

காரைநகரில் தற்பொழுது 2 இலட்சத்து 24 ஆயிரத்து 102 பனை மரங்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 19 ஆயிரத்து 820 பனைமரங்கள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகரில் உள்ள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தற்பொழுது காணப்படும் பனை மரங்கள் மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் வெட்டி அழிக்கப்பட்ட பனை மரங்கள் போன்றவற்றைக் கணக்கெடுக்கும் பணி கடந்த ஒரு மாத காலமாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பகுதி சமுர்த்தி செயலணி உறுப்பினர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டபோதே இத் தகவல் பெறப்பட்டுள்ளது. (ஐ-73)


## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 01 - 06 - 1982



மண்ணின் மடியில் 31 - 12 - 1999

செல்வி

**பிறேமியா (ரமா) கருணானந்தசிவம்**

*(பழைய மாணவி, யா/வேம்படி ம.க., முல்லை/மல்லாவி ம.கல்லூரி)*

சித்திரமே! ஒளி தேடிச் சென்றவளே!
தந்திரமாய் காலன் உனைத்தேடி வந்தானே
புத்தாண்டு வரவை எதிர்பார்த்து நின்றோமே
காலமே பொய்த்ததடி காற்றின் மூச்சு நின்றதடி
ஜோதியாய் நீ போனாய் எம் நெஞ்சம் வெடிக்குதம்மா!
சாதனைகள் பல கண்டோம் குழலியே நீ இல்லை
ஓம் சாந்தி சாந்தி என்று உன் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகிறோம் எம் மூச்சு உள்ள வரை!

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள்.

*சரவணை கிழக்கு,*
*வேலணை-09.*

(82165) (க.மகிந்தன்)



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 06 - 1928



மறைவு 03 - 01 - 1998

**அமரர் சிற்றம்பலம் நடராசபிள்ளை**

(ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர், வரணி)

திதி:-31-12-2000 (சஷ்டி)

பாசமிகு தந்தையாய் பாரினில் எமை வளர்த்து
வாழ்விலே வளம் பல பெற்று நாம் வாழ
வழி அமைத்த தந்தையே!
தூங்கள் மறைந்து ஆண்டு
மூன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*வாழைத்தோட்டம்,*
*வரணி வடக்கு,*
*வரணி.*

(ஓ14358)



## நாவலர்

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தரம் 1 முதல் O/L வரை
புதிய வகுப்புகள்
ஆரம்பம்:
01-01-2001
திங்கள் மாலை - 3 மணி
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.

(82267)



## அறிவித்தல்

**துவிச்சக்கரவண்டி மீன் வியாபாரிகளுக்கு!**

குருநகர் மீன்வாடி, தற்போது குருநகர் மீன் சந்தையில் (சின்னக்கடை) குருநகர் கடற்றொழில் மற்றும் குத்தகையாளர் சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க நடைபெறுகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

குருநகர் கடற்றொழில்
அபிவிருத்திச் சங்கம்

(82321)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கந்தரோடைக் கிராமஅலுவலர்
உயர்திரு.
**கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு**

அவர்கள் அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக நியமிக்கப் பெற்றமையையிட்டு, இன்று உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் **திரு. அ. தற்பரானந்தம்** J.P. அவர்களது தலைமையில், கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் நடைபெறும் விழா சிறப்புறவும், தொடர்ந்து அவரது சேவை மேலோங்கவும் பாராட்டி வாழ்த்துகின்றோம.

திரு.திருமதி நவராசா குடும்பத்தினர்

*தெல்லிப்பழை கிழக்கு,*
*தெல்லிப்பழை.*

(82269)



கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்

## "விழிப்பிரவு ஆராதனை"

என்னுடையவர்களை மீட்கும்
வருஷம் வந்தது — ஏசாயா 63:4

**இடம்** : கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்
89, பிறவுண் வீதி, கொக்குவில்.

**நாள்** : இன்று (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை

**நேரம்** : இரவு 10.00 மணிமுதல் அதிகாலை 5.00 மணிவரை.

புதுவருட ஆராதனை 2001

கிளைச் சபைகள்:-

| | | |
|---|---|---|
| மானிப்பாய் | : | காலை 8.00 மணி - 9.00 மணி வரை |
| திருநெல்வேலி | : | காலை 8.00 மணி - 9.00 மணி வரை |
| அளவெட்டி | : | காலை 8.00 மணி - 9.00 மணி வரை |
| சுதுமலை | : | காலை 8.00 மணி - 9.00 மணி வரை |

வாருங்கள்! ஆராதியுங்கள்! தேவாசீர்வாதம் பெறுங்கள்!

*சபை மேய்ப்பன்,*
*கல்வாரி குடும்பம்.*

(82306)

## புத்தாயிரத்தில் தடம்பதித்த நிகழ்வுகள்

# போரின் கொடூரத்தையும் சமாதானத்தின் வலிமையையும் உணர்த்திச் செல்லும் ஆண்டு

ஆண்டுகளைப் புரிந்து கொள்ளும் தவறால் கணனிகளில் கோளாறு ஏற்பட்டு உலகம் ஒருகணம் ஒழுங்கு குலைந்து செயலிழந்து போகும் என்ற மிரட்டலோடு பிறந்தது இந்த மிலேனியம் ஆண்டு.

ஆனால் எல்லோரையும் ஏமாற்றி விட்டு தமது வேலைகளை கணனிகள் ஒழுங்காகவே செய்து முடித்தன. இதனால் மிலேனியத்தின் ஆரம்பத்தில் ஏற்படும் என்று கருதப்பட்ட அனர்த்தங்களும் அவற்றை சமாளிப்பதற்காக உலகம் கோடி கோடியாகக் கொட்டி ஏற்பாடு செய்த முன்னேற்பாடுகளும் அர்த்தமற்றதாகிப் போயிற்று.

மிலேனியம் 2000இல் பிறக்கிறதா 2001இல் பிறக்கிறதா என்ற குழப்பம் இன்றுவரை உலகம் முழுவதும் நிலவுகிறது. 2001ஆம் ஆண்டு தான் புதிய மிலேனியம் பிறக்கிறது என்று இலங்கையில் உள்ள விஞ்ஞான புனைகதையாளரான ஆதர் சி.கிளார்க் கூறியுள்ளார். அந்த சர்ச்சை ஒருபுறத்தில் தொடர்ந்து கொண்டிருக்க -

இலங்கையில் போர் உக்கிரம் பெற்ற ஆண்டாக இந்த ஆண்டு கழிந்து போகிறது. இடைக்கிடையே சமாதானக் கீற்றுக்கள் தென்பட்ட போதும் வடக்கு - கிழக்கு பகுதிகளில் குறிப்பாக குடாநாட்டில் யுத்த கரு மேகங்களே தொடர்ந்தும் கருக் கொண்டிருந்தன.

"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முயற்சிகளுக்கு இந்த ஆண்டில் முக்கிய கவனம் செலுத்தப்படும்" என்று ஜனாதிபதியும் -

"ஆனையிறவைக் கைப்பற்றி யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர விடுதலைப் புலிகள் முயல்கிறார்கள்". என்று இராணுவத் தளபதி ஸ்ரீலால் வீரசூரியவும் -

தங்கள் புத்தாண்டுச் செய்திகளில் தெரிவித்ததோடு இலங்கையில் 2000 ஆம் ஆண்டு பிறந்தது.

இந்த ஆண்டு முழுவதும் வடக்கு - கிழக்கில் போர் தீவிரமாகத் தொடர்ந்தது. இலங்கை வரலாற்றிலும் உலகப் போரியல் வரலாற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்த பெரும் சண்டைகள் அரங்கேறின.

இலங்கை இராணுவத்தின் அசைக்க முடியாத தளம் என்று கருதப்பட்ட ஆனையிறவு இராணுவப் பெருந்தளம் புலிகள் வசம் வீழ்ந்தது. கடந்த ஆண்டு ஆரம்பமான ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் தொடர்ச்சியாக விடுதலைப்புலிகள் ஆனையிறவுப் பெருந் தளத்தைக் கைப்பற்றி தென்மராட்சியில் பளைவரை முன்னேறினர். அதேநேரத்தில் அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகள் ஊடாகவும் ஊடறுத்த விடுதலைப்

**தொகுப்பு:**
**அன்ரன்**

புலிகள் யாழ்நகரப் பகுதிக்குள் உள நுழைந்தனர். இதையடுத்து யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள 35 ஆயிரம் படையினரையும் காப்பாற்றுவதற்கு உதவுமாறு அரசாங்கம் உலக நாடுகளுக்கு அவசர கோரிக்கை விடுக்க நேர்ந்தது. உலக நாடுகள் ஒருத லைப்பட்சமாக அரசாங்கத்திற்கு ஆயுத உதவிகள் வழங்கின. இதனால் குடாநாட்டில் படையினரின் நிலை மீண்டும் ஓரளவு ஸ்திரமடைந்தது.

உக்கிரமான போர், மக்கள் இடப்பெயர்வு ஒருபுறத்தில் தொடர்ந்து கொண்டிருந்த அதேசமயம் நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகள் மறுபுறத்தில் தொடர்ந் தன. எவரும் எதிர்பாராத வகையில் கடந்த நவம்பர் மாதம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நோர்வே நாட்டுத் தூதர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்து நிபந்தனை அற்ற பேச்சுக்களுக்கு தயார் என்று அறிவித்ததைத் தொடர்ந்து சமாதான ஒளிக்கீற்றுக்கள் பளிச்சிட்டன.

இந்த அறிவிப்பு தமிழர்களிடம் மட்டுமன்றி நாட்டு மக்கள் அனைவரிடமுமே சமாதானம் பற்றிய எதிர்பார்ப்புக்களை மீண்டும் துளிர்விடச் செய்தது. எனினும் சமாதானத்தை எட்டுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காமலேயே இந்த ஆண்டு முடிவடைகிறது.

கடந்த 10 வருடங்களாக ஒவ்வொரு ஆண்டும் விட்டுச் செல்வது போன்று போரையும் சமாதான முயற்சிகளையும் மட்டும் அடுத்த ஆண்டுக்குரிய எச்சங்களாக விட்டுச் செல்கிறது 2000 ஆம் ஆண்டு.

இந்த ஆண்டில் உள்நாட்டில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் இந்தப் பகுதியில் தொகுத்துத் தரப்படுகின்றன.

### ஜனவரி

★ ஜன.5 - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலதிபரும் பிரபல சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் பகல் 11.15 மணியளவில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண ஒழுங்கையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொழும்பு பிளவர் வீதியிலுள்ள பிரதமரின் அலுவலகத்துக்கு முன்பாக காலை 9.05 மணிக்கு இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 7 பொலீஸார் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர். 29 பேர் படுகாயமடைந்தனர்.

★ ஜன.6 - களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளுக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையில் மோதல்கள் வெடித்ததில் தமிழ்க் கைதி ஒருவர் உயிரிழந்தார். 34 கைதிகள் காயம்.

கொழும்பு, தெஹிவளை - கல்கிசை மாநகரப் பகுதிகளில் ஊரடங்குச்சட்டம் பிறப்பித்து காலை முதல் நடைபெற்ற தேடுதல்களில் 2,125 தமிழர்கள் கைது.

★ ஜன.7 - களுத்துறைச் சிறையில் கைதிகளுக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையில் இரண்டாவது நாளாகவும் மோதல்கள் நடைபெற்றன. இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கைதி ஒருவர் கொல்லப்பட்டார். 8 கைதிகள் காயமடைந்தனர்.

★ ஜன.12 - ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் உறுப்புரிமையில் இருந்து அதன் முன்னாள் தலைவரும் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான வரதராஜப்பெருமாள நீக்கப்பட்டதாக கட்சியின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவிப்பு.

★ ஜன.14 - புளொட் அமைப்பைச சேர்ந்த பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வடிவேலு விஜயரட்ணம் (செல்லக்கிளி மாஸ்டர்) நகரசபை அலுவலகத்துக்கு முன்பாக வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ ஜன.19 - அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண எடுக்கும் முயற்சிகளுக்கு ஐ.தே.க. இடைஞ்சலாக இருக்காது என்று ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் அறிவிப்பு.

★ ஜன.27 - வவுனியா தபாலகத்தில் பகல் 11.10 மணியளவில் குண்டு வெடித்ததில் 9 பேர் உயிரிழந்தனர். 73 பேர் காயமடைந்தனர்.

இராணுவத்தில் தமிழரையும் சேர்த்துக்கொள்ளத் தயார் என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய தெரிவிப்பு.

★ ஜன.29 - தமிழ்ப் பெண் கைதிகள் மீது வெலிக்கடைச் சிறையில் நடந்த தாக்குதலில் மூவர் காயம்.

### பெப்ரவரி

★ பெப்.4 - இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றை எட்டும் முயற்சியில் கருத்து ஒற்றுமையும், இணக்கமும் காண தமது அரசியல் கோட்பாடுகளை மறந்து முன்வருமாறு சகல அரசியல் கட்சிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா தனது சுதந்திரதின உரையில் அழைப்பு விடுத்தார்.

★ பெப்.7 - குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு கோரி குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்கள் நகரில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

★ பெப்9 - முத்திரைச் சந்திப் பகுதியில் காலை 9.10 மணியளவில் இடம் பெற்ற கிறைமோர்த் தாக்குதலில் 3 பொலீஸார் கொல்லப்பட்டனர். 7 பொலீஸார் காயமடைந்தனர்.

★ பெப்.10 - அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர்.

சாகரவர்த்தன கப்பல் கப்டன் உட்பட 15 சிப்பாய்கள் தம்மை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதம்.

★ பெப்.13 - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட்வொலேபெக் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசினார்.

★ பெப்.15 - மியாங்குளத்தில் வாகன அணிமீது இடம்பெற்ற தாக்குதலில் 13 பொலீஸார் உயிரிழந்தனர். 15பொலீஸார் காயமடைந்தனர்.

★ பெப்.16 - ஆனையிறவுத் தளத்தின் தெற்குப் பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அங்கு பெரும் சமர் வெடித்தது.

★ பெப்.17 - விமானப்படைக்குச் சொந்தமான 'பெல் ரேஞ்' ரக ஹெலி ஒன்று எழுதுமட்டுவாள் பகுதியில் விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டது.

★ பெப்.21 - செம்மணியில் மீட்கப்பட்ட தடயப் பொருள்களில் பெண ஒருவருடையது அடையாளம் காணப்பட்டது.

★ பெப்.22 - செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் தொடர்புடையதாகக் கூறப்பட்ட 4 படை அதிகாரிகள் உட்பட 7 பேரைக் கைதுசெய்யுமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவு.

★ பெப்.26 - பிரதி அமைச்சர் சாந்த பிரேமரட்ன மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் அவர் காயமடைந்தார்.

கோப்பாயில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது மாணவன் ஒருவன் இராணுவச் சிப்பாயால் பலவந்தமாக தன்னினச் சேர்க்கைக்கு உள்ளாக்கப்பட்டான்.

★ பெப்.28 - தமது காவலில் இருந்த 15 கைதிகளில் நான்கு பேரை விடுதலைப் புலிகள் விடுவித்தனர்.

★ பெப்.29 - வலி.வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாததை ஆட்சேபித்து கொழும்பு உயர்நீதிமன்றில் அரசுக்கு எதிராக அடிப்படை உரிமைகள் மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

### மார்ச்

★ மார்ச்.1 - ஈ.பி.டி.பியின் யாழ். மாநகரசபை உறுப்பினரான வைரமுத்து அன்ரன் சிவலிங்கம்(வயது62) நண்பகல் 12.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பிஸ்ரல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தனங்களப்புப் பகுதியில் நண்பகல் 11.30 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் அங்கு நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்த எட்டு விவசாயிகள் காயமடைந்தனர்.

★ மார்ச்.2 - திருகோணமலை உள்துறைமுக வீதியில் காலை 10.30 மணியளவில் தற்கொலைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒருவர் உயிரிழந்தார். இலக்கு வைக்கப்பட்ட 221 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் பியால் அபயசேகர தப்பினார்.

★ மார்ச்.6 - திருகோணமலைக்கும் புல்மோட்டைக்கும் இடைப்பட்ட கிழக்குக் கடற்பரப்பில் நள்ளிரவு மூன்று மணிநேரம் உக்கிர கடற் சமர்.

கிளிநொச்சி உதயநகர் பகுதியில வீடு ஒன்றின் மலசலகூடக்குழியினுள் இருந்து 8 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

★ மார்ச்.8 - கைதுசெய்யப்பட்டு காணமல் போனோர் பாதுகாவலர் சங்கம் அன்னையர் முன்னணி ஆகியவை யாழ்.செயலகத்தின் முன்னால மறியல் போர் நடத்தின. இதனால் யாழ்.செயலகம் செயலிழந்தது.

★ மார்ச்.9 - அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

★ மார்ச்.10 - கொழும்பு நகரை அண்டி இராஜகிரிய ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு முன்பாக காஸல் வீதியில் தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து துப்பாக்கிச் சமரும் இடம் பெற்றது. இதில் இரு தற்கொலையாளிகள் உட்பட 28 பேர் பலியாகினர். 48 பேர் படுகாயம்.

★ மார்ச்.14 - செம்மணிப் புதைகுழிகள் தொடர்பான சந்தேக நபர்கள் 5பேர் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின்போது மீடகப்பட்ட 15 எலும்புக்கூடுகளுக்கும் உரியவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள் - என்று யாழ்.மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் தீர்ப்பு வழங்கினார்.

★ மார்ச்.16 - மட்டக்களப்பு - பொலநறுவை வீதியில் பொலீஸ் - இராணுவ வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பொலீஸார் பலியாகினர் 16 பேர் காயமடைந்தனர்.

நோர்வே அரசின் உதவியுடன் புலிகளுடன் பேச்சு நடத்தும் திட்டத்தை உடன் கைவிட வேண்டும், இலங்கை அரசின் சகல வளங்களையும் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை ஒடுக்க வேண்டும் என்று கோரும் கடிதம் ஒன்றை மல்வத்தை, அமரபுர, அஸ்கிரிய, ராமான்ய பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.

★ மார்ச்.20 - இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லிண்டா ஜோய் டபீல்ட் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

★ மார்ச்.22 - போர் நிறுத்தம் செய்து பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயார். பேச்சுக்கள் ஆரம்பித்ததும் வடக்கு - கிழக்கில் நிலை கொண்டுள்ள படையினர் முகாம்களுக்குள் முடங்க வேண்டும். போர் நிறுத்தத்தை கண்காணிக்க குழு அமைக்கப்படவேண்டும் என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'தமிழ் காடியன்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

★ மார்ச்.25 - யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டுமெனக் கோரி யாழ்.நகரில் சமாதானப் பேரணி நடத்தப்பட்டது.

★ மார்ச்.26 - வடமராட்சி கிழக்கில் கடல், தரைஆகிய இரு முனைகளில் விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

பளை இத்தாவில் பகுதியில் பிற்பகல் 2.30 மணியளவில் பிரசவித்த குழந்தையுடன் சென்று கொண்டிருந்த ஓட்டோ மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் கணவன், மனைவி ஓட்டோ சாரதி ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

★ மார்ச்.27 - மாமுனைப் பகுதியிலிருந்து படையினர் பின்வாங்கினர்.

பளையில் தொடர்ந்து உக்கிரச் சமர் நடைபெற்றது.

பலாலியில் தரையிறங்கிய வேவு விமானம் விபத்துக்குள்ளாகிச் சேதமானது.

★ மார்ச்.29 - மருதங்கேணிப் பகுதியிலிருந்து படையினர் பின் வாங்கினர். தளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய இராணுவ மையம் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் அறிவித்தனர்.

★ மார்ச்.30 - பலாலியிலிருந்து கட்டுநாயக்காவை நோக்கிச் சென்று கொண்டிருந்த 'அன் ரனோவ் - 26, ரக விமானம் அனு ராதபுரம் பகுதியில் விபத்துக்குள்ளானது இதில் 4 ரஷ்ய விமானிகள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர்.

இந்த மாதத்தில் வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து ஆயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர்.

### ஏப்ரல்

★ ஏப்ரல் - பளைப் பிரதேசத்தில் இருந்து பொதுமக்களை வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

★ ஏப்ரல்.2 - யாழ்ப்பாணம்-கண்டி வீதியில் முகமாலைக்கும் பளைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியைக் கைப்பற்றுவதற்காக படையினர் 'வலி சக்கர' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

பளைப் பகுதியில் இருந்து ஆயிரம் பேர் கிளாலி ஊடாக பிற்பகல் மிருசுவில் வந்து சேர்ந்தனர்.

★ ஏப்ரல்.3 - முகமாலையில் உக்கிர சமர் தொடர்ந்தது.

★ ஏப்ரல்.4 - பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லமுடியாதவாறு கிளாலி காணிக்கை மாதா ஆலயம் பகுதியில் தடுத்து வைக்கப்பட்ட மக்களுக்காக யாழ்.செயலக அதிகாரிகள் எடுத்துச்சென்ற நிவாரணப் பொருள்களை மக்கள் ஏற்க மறுத்து திருப்பி அனுப்பினர்.

★ ஏப்ரல்.6 - பளைப் பகுதியில் இருந்து 1500 பேர் வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தபிக்குகளும் பொதுமக்களும் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை கொழும்பில் நடத்தினர். நோர்வே நாட்டுத் தேசியக் கொடியும் எரிக்கப்பட்டது.

பளையில் இருந்து மக்களை வெளியேற அனுமதிக்குமாறு கோரி யாழ்.செயலகத்தின் முன் சமாதானத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சி.....

வன்னிப் பெரு நிலப்பரப்பையும் குடாநாட்டையும் இணைக்கும் கழுத்துப் பகுதியில் கழுத்தை நெருக்கிப் பிடித்த வகையில் அமைந்திருந்தது ஆனையிறவு இராணுவத் தளம்.

அமெரிக்க 'கிறீன் பரேட்' படையினரால் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட படையினர் உட்பட 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் கடமையில் இருந்த முகாம்.

1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் இந்த முகாம் மீது 'ஆ.க.வெ.' எனப் பெயரிடப்பட்ட ஆகாய, கடல், தரைவெளியிலான மும்முனைத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் ஒன்றரை மாதங்களுக்கு மேலாக நீடித்த இந்த முற்றுகைப் போர் இறுதியில் படையினரால் முறியடிக்கப்பட்டது.

கட்டளைப் பீடம், பல பிரதான இராணுவ முகாம்கள், சிறிய இராணுவ முகாம்கள், இராணுவ தொடரரண்கள் என்பவற்றைக் கொண்டிருந்த இந்த முகாம் வடக்கில் இருந்த மிகப் பெரும் இராணுவத் தளங்களில் ஒன்று.

இந்த இராணுவ முகாம் புலிகளால் தாக்கிக் கைப்பற்றப்பட்ட சம்பவமானது இந்த ஆண்டின் முக்கிய சம்பவமாக அமைந்தது.

மரபுப் போர் முறையில் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியை உலகுக்கு எடுத்துக் காட்டியது.

புலிகளின் இந்த வெற்றி சர்வதேசத்தை வியப்பில் ஆழ்த்தியதுடன் உலகப் போரியல் வரலாற்றிலும் பதிவானது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புறொயிலர் கோழி விற்பனைக்கு

கொழும்பிலிருந்து விமானம் மூலம் தருவிக்கப்பட்ட சுத்தம் செய்த புறொயிலர் இறைச்சிக் கோழி தினமும் பெற்றுக்கொள்ள லாம். தொடர்பு: T.கரன், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக் கடை, யாழ்ப்பாணம். (81880)

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் தினமும் பெற்றுக்கொள்ளலாம். புத் தாண்டை முன்னிட்டு மொத்தமாக வும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (82320)

## மணமகள் தேவை

யாழ் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 1971ஆம் ஆண்டு பிறந்த, உதயத்தில செவ்வாய்க் குற்றமுள்ள, லண்டனில் சுப்பர் மாக்கற் வைத்தி ருக்கும் மணமகனுக்குப் படித்த, அழகிய, உயரமான, நற்பண்புள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க் கின்றனர். தொடர்பு: திரு.வி.தனபால சிங்கம், 22 றக்கா ஒழுங்கை, சுண் டிக்குளி. (82270)

## வகுப்புக்கள்

தமிழ் தட்டெழுத்து, சுருக்கெ ழுத்து, ஆங்கிலத் தட்டெழுத்து வகுப்புக்கள். புதிய பிரிவு நாளை 01.01.2001 ஆரம்பம். தொடர்பு: 5, அம்மன் வீதி (வைரவர் கோயில் முன்பாக), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (82287)

## தவறிவிட்டது

979, துண்டி வீதி, கொழும்புத் துறை என்னும் முகவரியைச் சேர்ந்த க.சி.தவராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல. 441460296**V**), விசேட அடையாள அட்டையும் 14-12-2000 அன்று நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்துக்கும் யாழ்.கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை என்னும முகவரியில தயவுசெய்து ஒப்படைக்கவும். (82284)

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி என்ற முகவரியை உடைய நாக முத்து குணசேகரம் என்பவரின் விசேட அடையாள அட்டை (இல. 091025 680) புன்னாலைக் கட்டுவனுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சாரங்கா படமாடம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (82328)

யோகேஸ்வரன் வசந்தகுமாரி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல.536712488**V**) விசேட அடையாள அட்டையும், யோ. டர்மினி என்பவருடைய விசேட அடையாள அட்டையும் (இல.09020 45237) பாடசாலை அடையாள அட்டையும் (யா.இ.ம.க) யாழ்நகர் நவீனசந்தை, உட்புறப் பகுதியில் 27.12.2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 44/1, சங்கி லியன் வீதி, நல்லூர் எனும் முகவரி யில் ஒப்படைத்து உதவவும். சன் மானம் வழங்கப்படும். (82310)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ள லாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல் லூர் வீடியோ சென்ரர் வளவு), முத் திரைச் சந்தையடி, நல்லூர். (82312)

கல்பேட்ஸ், சேவல் என்பன விற் பனைக்குண்டு. சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (82319)

சேவல், கல்பேட் தினமும் இலவசமாகச் சுத்தம் செய்து பெற் றுக் கொள்ளலாம். லவ்பேட்ஸ் (பச்சை, நீலம்) விற்பனைக்குண்டு. 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடு வில் சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (81827)

## புறொயிலர் குஞ்சுகள்

சமிரா இன பெரிய புறொயிலர் குஞ்சுகள் மீண்டும் குறைக்கப்பட்ட விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப் பாணம். & 123, பஸ்நிலையம் முன் பாக(கிளின் சொட் அருகில்) யாழ்ப் பாணம். (82309)

## MATHS TUTION

**Year Six to (O/L), (A/L)** தனிப்பட்டதும் குழுக்களும் **Teacher B.Sc. (Sri Lanka)** 34/2, **Rasavinthodda Road, Jaffna (Next to Rail Road).** (81958)

## MATHS ENGLISH

**O/L Distinction, Credit** பெறு பேறு எடுக்க ஆண்டு 8-10 புதிய பாடத்திட்டம் ஆரம்பத்திலிருந்து விசேடமாகக் கற்பிக்கப்படும். ஆசிரி யர், 85,சிவன்கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (82276)

## விற்பனைக்கு

நஷனல் **N.V 7500** டெக், பிரமிட் பொக்ஸ், அம்பிலிபயர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2863, 3327.** (82297)

நல்ல நிலையிலுள்ள **DOUBLE READS HARMONIUM** (ஆர்மோனி யம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **S.** அமலன், **18/2,** கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (82283)

பாவனைக்குரிய வீட்டு நிலை, யன்னல் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அக்கடமிலேன் (மாநகரசபை முன்பாக), பருத்தித் துறை வீதி, நல்லூர். (82315)

## பேட்டுக் குஞ்சுகள்

மீண்டும் விலை குறைக்கப்பட்ட வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை.சிவகுமார், 123, பஸ் நிலையம் முன்பாக (கிளின் சொட் அருகில்) யாழ்ப்பாணம். 461 நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (82308)

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த 34 வயது ஆயிலியம் 4ஆம பாதம், செவ்வாய்க் குற்ற முள்ள, **B.Sc (Agriculture)** மணமக ளுக்கும், 37 வயதுடைய கேட்டை 2ஆம் பாதம், செவ்வாய்க்குற்றமற்ற, பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணி புரியும் மணமகளுக்கும் பண்பான தொழில் புரியும் மணமகன்களை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாத கக் குறிப்பு மற்றும் விவரங்களுட னும் தொடர்பு கொள்ளவும். விளம் பர இல.1167, மே/பா உதயன். (82318)

## தேவை

"டிஸ் அன்ரனா"விற்கஇருப்பவர் கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ஐங்கரன், இல.202, கோயில் வீதி, யாழ்ப்பா ணம். **T.P:**021-2217 (82279)

## மணமகள் தேவை

66ஆம் ஆண்டு பிறந்த, சுவி ஸில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற, செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. மணமகன் இலங்கை வந்து திருமணம் செய்து மணமகளை அழைத்துச் செல்லக் கூடியவர். தொடர்பு: விளம்பர இல. 1166, மே/பா உதயன். (82316)

## திருமண சேவை

எங்களிடம் உள்ளூர், வெளியூர் உத்தியோகத்தில் மணமக்கள் உள் ளனர். புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திரு மண சேவை, 178, நாவலர் றோட், பிறவுண் றோட்சந்தி, யாழ்ப்பாணம். (82323)

# பிரார்த்தனை அஞ்சலி



வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள், புராணங்கள், சாஸ்திரங்கள் கற்று, கற்றவற்றை கற்பித்து எமது சமூக இளம் சிறார்களுக்கு சிலவற்றில் பயிற்சியும் கொடுத்து அன்பால் கவர்ந்த சிவாச்சார்ய குருமணி

**பிரம்மஸ்ரீ**

**சுவாமிநாத.இராஜேந்திரக்குருக்கள்**

அவர்களின் திடீர் மறைவு எமது சமூகத்துக்கு ஒரு பேரிழப்பா கும். எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினரு டன் பகிர்ந்து கொண்டு அன்னாரின் ஆத்மா ஷண்முகநாத பரமேஸ்வரனின் பாதக் கமலத்தில் இணைந்து பேரின்ப பெருஞ் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் தேவஸ்தானம்,**
**பிரம்மஸ்ரீ ஆ.சந்திரசேகரக்குருக்கள்.**

*நீர்வேலி.* (82333)

# கண்ணீர்க் காணிக்கை



**அமரர் கதிரவேலு விஜயரத்தினம்**

(தலைவர் - வழிபடுவோர் சங்கம்,
பொருளாளர் - திருப்பணிச்சபை)

அன்னாரின் திடீர் மறைவால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக் கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரது ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான,**
**வழிபடுவோர் சங்கத்தினரும்,**
**தர்மகர்த்தா சபையினரும்,**
**திருப்பணிச் சபையினரும்.**

(82339)

# போரின் கொடூரத்தையும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுக்கள் ஏற்பாட்டில் 40 இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் மறியல் போராட்டம் நடத்தின.

★ ஏப்ரல் 7 - பளை மக்களை வெளியேற அனுமதிக்குமாறு கோரி பல்கலை. மாணவர்கள் பகிஷ்கரிப் பில் குதித்தனர்.

நாகர்கோயில் கடற்பிரதேசத்தில் கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் இரு டோறாப் படகுகள் மூழ்கடிப்பு.

★ ஏப்ரல் 8 - பளை மக்களை வெளியேற அனுமதிக்கக் கோரி பல்கலை. மாணவர்கள ஐ.நா. தூதர கம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியவற்றின் முன் மறியல்போரில் ஈடுபட்டனர்.

★ ஏப்ரல் 10 - கண்டி வீதியில் முகமாலைக்கும் பளைக்கும் இடைப் பட்ட புலிகளிடம் பறிகொடுத்த பகு தியை தாம் மீளக் கைப்பற்றியதாக படைத்தரப்பு அறிவிப்பு.

பளை மக்களை வெளியேற அனுமதிக்கக்கோரி பல்கலை. மாண வர்கள் யாழ்.செயலகம் முன் மறியல்போர்.

★ ஏப்ரல் 11 - கண்கள் கட்டப் பட்ட நிலையில் மூன்று தமிழ இளை ஞர்களின் சடலங்கள் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டன.

★ ஏப்ரல் 12 - பளை மக்களை வெளியேற அனுமதிக்கக் கோரி யாழ்.குடாநாட்டில் ஹர்த்தால அனுஷ் டிப்பு. குடாநாடு ஸ்தம்பிதம்.

திருமலைநகரின் மக்ஹெஸர் ஸ்ரேடியத்தில் இடம்பெற்ற கலை நிகழ்வின்போது இரவு 9.40 மணிக்கு இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 4 பேர் பலி.65க்கும் மேற்பட்டோர் காயம்.

★ ஏப்ரல் 15 - இனப்பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்பட்ட பின்னரே வடக்கு-கிழக்குப் பகுதி களில் இருந்து படையினர் வாபஸ் பெறப்படுவர் என்று வெளி விவகார அமைச்சு அறிவித்தது.

★ ஏப்ரல் 16 - இலங்கையில் காணாமல் போனவர்கள் குறித்து அரசாங்கம் கடைப்பிடிக்கும் போக் கைக் கண்டித்து ஐ.நாவின் காணா மல் போனோர் தொடர்பான நடவடிக் கைக் குழு அறிக்கை வெளியிட்டது.

★ ஏப்ரல் 18 - ஆனையிறவுக்கு வடக்கே பளைக்கும்-இயக்கச்சிக் கும் இடையே மீண்டும் கடும் சமர் வெடித்தது.

★ ஏப்ரல் 19-பளை புதுக்காட்டுச் சந்தி அருகே தொடர்ந்து கடும்சமர்

★ ஏப்ரல் 20 - ஆனையிறவுக்கு வடக்கே சண்டை தொடர்ந்தது.

யாழ் மற்றும் வன்னியில் உள்ள படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக் கப்பட்டார்.

குடாநாட்டுக்கான தொலைபேசி சேவைகள் செயலிழந்தன.

★ ஏப்ரல் 21 - பாதுகாப்புப் படைகளின் கூட்டுப்படைத் தளபதி யாக ஜெனரல் றொஹான் தளு வத்த ஜனாதிபதியால் நியமிக்கப்பட் டார்.

★ ஏப்ரல் 22 - ஆனையிறவு மற்றும இயக்கச்சி இராணுவப் பெருந் தளங்கள் புலிகள் வசம் வீழ்ச்சி அடைந்தன.

★ ஏப்ரல் 24 - யாழ்ப்பாணத்தை இராணுவம் தொடர்ந்து தக்க வைத் திருக்கும் என்பதில் நம்பிக்கையும் உறுதியும் கொண்டுள்ளோம் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய தெரிவித் தார்.

★ ஏப்ரல் 25 - சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன் னரே புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விடுவர் என்று ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் தெரி வித்தார்.

ஏப்ரல் 27 - குடாநாட்டின் யுத்த நிலைமை காரணமாக மிதி வெடி அகற்றும் நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டன.

பளைப் பகுதியில் மீண்டும் கடும் சமர் ஆரம்பமானது.

ஏப்ரல் 28 - ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியை அடுத்து நாட் டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து நேரில் பேச ஜனாதிபதி, ரணிலுக்கு அழைப்பு விடுத்தார்.

ஏப்ரல் 29 - ஜனாதிபதியின் அழைப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டார்.

ஏப்ரல் 30 - பளை நகரப் பகுதி காலையில் தம் வசமானதாக விடுத லைப் புலிகள் அறிவித்தனர். அரசுத் தரப்பு அதனை ஏற்றுக் கொண்டது.

ஆனையிறவுத் தளம் வீழ்ந்த பின்னர் முதற் தடவையாக குடா நாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவை மீண்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம் பிக்கப்பட்டது.

ஏழாலைப் பகுதியில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்நால்வர் உயிரிழந்தனர்.

நாட்டை யுத்தகால சூழ்நிலை யில் வைத்திருப்பது என்று அமைச்ச ரவை முடிவு செய்து விசேட வர்த்த மானி மூலம் அறிவிக்கப்பட்டது.

(வளரும்)


**நியூ விமாகி**

சிவப்பு சீமெந்து
**(Holand Baral)**
மொத்தமாகவும்சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**நியூ விமாகி**
**27/3,** *மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.* (82244)


# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 25 - 03 - 1932



உதிர்வு 11 - 12 - 2000

**திருமதி**
**அன்னம்மா சிவலிங்கம்**

எமது அன்புத் தெய்வம் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவருக்குச் சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்கள், தாதிமார்கள், அவரை பராமரித்தவர்கள் ஆகியோருக் கும் 12-12-2000 அன்று நடந்த இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றியை நவில்கின்றோம்.

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்*

(82324)

# இந்த வார இராசி பலன்

# 31-12-2000 - 06-01-2001

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| வெ சந் | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| சூ கே புத | | செவ் | |

**மாற்றம்:-**

*31 - 12 - 2000* இல் சதயம் நட்சத்திரம் கும்பம் இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் எதை நம்புவது? வேலி பயிரை மேய்ந்தால் பயிரை வளர்ப்பவர்கள் நிலை என்ன? அரசுக்கு அழுத்தங்களை உலகநாடுகள் கொடுக்க இடம் உண்டு. எதிர்பாராத திசை திருப்பங்கள் ஏற்படலாம். இந்தியாவில் தீவிரவாதிகள் திடீர் திடீர்த் தாக்குதல்கள் நடத்த இடமுண்டு. அரசியல் வாதிகளிடையே மனக்கருத்துக்கள், பிரிவுகள் ஏற்படஇடம் உண்டு. மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகளில் பொருளாதார அழுத்தக்கள் கொடுக்கும். இயற்கையின் சீற்றம் திடீரென கிழக்கு நாடுகளில் மழை வெள்ளம், காற்றழுத்தம் என்பனவற்றைக் கொடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

பொறாமையை வெளிக்காட்டாமல் எத்தனை பேர் மனம் குமுறுகின்றார்கள். இதைச் சமாளித்து நீங்கள் நடக்க முயலவேண்டும். அல்லது கௌரவப் பிரச்சினை தலைதூக்க இடமுண்டு. தியவர்களின் தொடர்பு எப்பொழுதும் துன்பத்தைத் தரும். எனவே தொழில் ஸ்தானத்தில் கவனமாக இருக்கவும். எதிர்ப்பாலார் ஆதரவு தருவது போன்று வீண் பிரச்சினைகளை உருவாக்குவார்கள். சகோதர உதவிகள் கிடைக்கும். எப்படியாவது பணம் தேடுவோம் என எண்ணிச் செயற்படுவீர்கள். பெற்றோருடனும் கருத்து வேற்றுமை வர இடமுண்டு. மேலதிகாரிகளை மதித்து நடவுங்கள். காணி பூமி சம்பந்தமான மனக் கவலைகள் வரலாம். மூட்டு வலி, மூலவருத்தம், உஷ்ண, குளிர் பீடைகள், தோல்வருத்தம் வரும். பாதுகாப்புத் துறை, தொழில் நுட்பத் துறை, மருந்துத் துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

## இடபம்

கைக் கெட்டியும், வாய்க்கு எட்டியும் என்ன பிரயோசனம்? மன அமைதி இல்லையேல் அனைத்தும் இல்லையே. அழகிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் அளவுக்கதிகமான செயற்பாட்டில் போனால் செலவும் வீண் குழப்பங்களும் ஏற்படும். குடும்பத்தினரின் செலவுகளுக்காகக் கடன்படு நிலை வரலாம். ஓடியாடித் திரிந்து குடும்பத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அயலவருடன் அன்பாக இருக்கவும். வருத்தத்தால் மருந்துச் செலவு குடும்பத்தில் அதிகரிக்க இடமுண்டு. நெஞ்சுப் படபடப்பு, சலவருத்தங்கள், தொண்டை வருத்தம், சளித் தொல்லை என்பன வர இடமுண்டு. பிரயாணத்தைத் தவிர்க்கவும். சட்டத்துறை, பாதுகாப்புத் துறை, ஆலயத்துறை, சந்தை வியாபாரம் போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

## மிதுனம்

மனதில் அழுக்கு, அழுக்காறு உள்ளவர்களுக்கு எதனைச் சொன்னாலும், எந்த உடுப்புக்களைப் போட்டாலும் அவர்களின் கொடிய புத்தி மாறாது. எனவே இப்படியானவர்கள் தொழில் ஸ்தானத்தில் தொல்லை கொடுப்பார்கள். அடிக்கடி பொதுக் காரியங்களுக்காகச் செயற்பட்டபடி இருப்பீர்கள். திடீர் கோபம் அதனால் இழப்பு வரும். எதிர்ப்பாலார்கள் உதவி செய்வார்கள். சலிப்பு, களைப்பு, மலச் சிக்கல், கழுத்து, தொண்டை சம்பந்தப்பட்ட வருத்தங்கள் வரலாம். சட்டத்துறை, வியாபாரத்துறை, ஆசிரியத் துறை, கூலி வேலை போன்ற துறையினர்கள் அதிக நன்மைகளை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: தினசரிமத்தியானம் 12.30-1.30 வரை (புதன்கிழமை தவிர).

## கடகம்

அடிமனதில் சண்டை என இருப்பவர்களுக்கு எந்தச் சமாதானத்தைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே விதி தன் வேலையைச் செய்தபடி இருக்கும். தொழில்ஸ்தானத்தில் படபடப்பு இருந்தாலும் நன்மைகள், வரவேற்புக்கள் இருக்கும். இடமாற்றங்கள் சகஜம். தேவைகளை நிதானப்படுத்தி கட்டுப்படுத்துங்கள்; அல்லது வீண்செலவுகள் கொடுத்தபடி இருக்கும். செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். வயிற்றுநோ, நெஞ்சுப்படபடப்பு, பயவுணர்வு, கைகால்பிடிப்புநோ, சளிவருத்தம் என்பன வரும். அரசியல்துறை, சமயத்துறை, வியாபாரத்துறை, கமிஷன் வேலை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், பிற்பகல், சனி.

## சிங்கம்

உண்மைகள் என்றும் மறைவதில்லை. பொய்மை அதிக காலம் நீடிப்பதுவுமில்லை. எதற்காகப் போராடுகிறீர்கள்? சத்தியதர்மத்தை தேடி அலையாதீர்கள். உண்மை உங்கள் பக்கத்திலேயே இருக்கின்றது. உங்களுடன் போட்டி போடுவார்கள், உங்கள் சொத்தை அபகரிப்பவர்கள், உங்கள் புகழ் - அதிகாரம் மேலோங்குவதைத் தடுப்பவர்கள், யார் எனச் சிந்திக்கிறீர்களா? உங்களுக்கு அடுத்த படியிலுள்ள அயலவர்கள் தான் உங்களுக்கு கெடுதி செய்ய யோசிப்பவர்கள், இதனாலேயே இயேசுநாதர் அயலவரை நேசியுங்கள் எனச் சொன்னார் போலும். அதிக தூரத்திலுள்ளவர்கள் கெடுதிகள் செய்வது குறைவு. எனவே தொழில்ஸ்தானத்தில் அவதானமாக இருந்து செயற்படுங்கள். காய்ச்சல், சளி, தொண்டைநோ, நாரிநோ, கை கால் விறைப்பு வரும். இயந்திரத்துறை, இரும்புத் துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன் பிற்பகல். சனி.

## கன்னி

அக்கினி குண்டலத்தில் முன்பு உடலுக்கு உடல் மாத்திரமா. தாலிகட்டிப் பந்தத்தைச் சேர்க்கின்றது? உடலையும் உயிரையும் கூடமயானத்தில் எரித்துப் பிரிக்கும் விந்தை தான் என்ன என எண்ணும் மனங்கள் எத்தனையோ எனச் சிந்திக்கிறீர்களா? உண்மை அன்பு இல்லாத உடலும் - மனமும், உடலும் உடலும், உயிரும் உயிரும் சேர்வதில் அர்த்தமில்லை. சட்டம் சம்பிரதாயங்கள் என்னதான் செய்ய முடியும்? எனவே எதற்கும் இவ்வுலக வாழ்விற்கு காசு, பொருள் தேவை என எண்ணிப் பொருளைத் தேடுவதில் சிந்தனையாக இருக்கவும். இவ்வுலகத் தேவைகளை பொருளில்லாதவர்கள் தேடமுடியாது. தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் நன்மைகள் நடக்கும், வாகனச்செலவுவரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். சளிவருத்தம், மூலவருத்தம், தோல் கிருமித்தாக்கம், உஷ்ண, குளிர்பீடைகள்வரும். தகவல்பகுதி, கலைத்தொடர்பு, குருத்தொழில், இசைத் துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.

## துலாம்

மரம் வைத்து நீர் ஊற்றி, பசளையிட்டு வளர்த்தவர்களுக்குத்தான் தெரியும் அதன் பெருமை. அம் மரத்தைத் தறிப்பவர்களுக்குத் தெரியாது அதன் அருமை. எனவே தொழில் ஸ்தானத்தில் சேதங்கள் வராது பார்த்துக் கொள்ளுங்கள். பல திட்டங்கள் உருவாகும். சகோதரர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். அரச உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். பெற்றோர்களின் உதவிகள் கிடைக்கும். சகோதரர்கள் நன்மையும் சிறப்பும் அடைவார்கள். தலைவலி, தோல் வருத்தம் வயிற்றுப் பொருமல் என்பன கொடுக்கும். ஆராய்ச்சித்துறை, ஆசிரியத் துறை, வியாபாரத்துறை, மருந்துத்துறை, நீதித்துறை, போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வெள்ளி, சனி.

## விருச்சிகம்

ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கொட்டிவிட்டால் பின்பு அள்ள முடியுமா? எமக்குக் கொடுத்த பாத்திரத்தை நாம் நடித்து முடிக்காமல் விட்டுவிடவும் முடியுமா? இடையில் சாத்திரத்தைப் பார்த்து நடவாமல் இருந்து விட்டு வெறுமனமே இதுவிதி முடிவு என எம்மை ஏமாற்ற முடியுமா? எது எப்படி இருந்தாலும் பசிக்கு உணவு — உணவுக்கு காசு — காசு பெற உழைப்பு. எனவே தொழில் ஸ்தானத்தில் உங்கள் உழைப்பு, ஊக்கம் மிக முக்கியமாகும். இதை நிறைவு செய்ய பிரயாசைப்பட்டபடி இருப்பீர்கள் முயற்சிக்குத் தகுந்த மாதிரி பணவரவுக்களும் இருக்கும். கிருமித் தாக்கம், மூக்கு, தொண்டை நோ, நரம்பு விறைப்பு, சல அடைப்பு, உஷ்ணபீடைகள் வரலாம். மதுபானசாலை, போக்குவரத்துத்துறை, கூலி வேலைகள், வியாபாரம், மருந்து தொடர்பான துறைகள், பாதுகாப்புத்துறைகள் போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வெள்ளி, சனி.

## தனுசு

'நாம்ஆடிஅசைவதெல்லாம் குதம்பாய் இந்தக் காசுக்குத் தானடி. ஆறுமுகன் வாசலுக்குப் போவதுவும் குதம்பாய் இந்தக் காசுக்குத் தானடி. ஆறடிப் பூமியில் விழுந்தாலும் குதம்பாய் இங்கு ஆரும் வருவாரோ எடி. குதம்பாய் அறிமுகத்தால் வந்தவினை என்றுபடி குதம்பாய்!' என்ன? சித்தர் சிந்துபாடுவதாக நினைக்காதீர்கள். தொழில் ஸ்தானத்தில் காசுக்காக போராடுவீர்கள் திடீர்க் கோவம் நட்பை சோதனைக்குள்ளாக்கும். வயிற்றுநோ, எலும்பு நோ, குடல்வருத்தங்கள், இரத்த வருத்தங்கள் என்பன வரும். பத்திரிகை, பேப்பர் வியாபாரம் அச்சுத் தொழில், இரசாயன வேலைகள், கலைத் துறைகள், இரும்பு வேலை செய்பவர்கள் போன்ற துறையினர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்கள்:- ஞாயிறு, வெள்ளி, சனி.

## மகரம்

நல்லவர்களின் மனங்களை நோகச் செய்பவர்கள் நிச்சயம் தம்வாழ்விலும் நொந்து போவார்கள். அதுவும் மது, எதிர்ப்பால், அதிகாரப் பொறாமையால் ஒருவரின் உயிர், உடல், பொருள், கல்வியை அழிக்க முனைபவர்கள் தம்வாழ்வில் எதைப் பெரிதாக எண்ணுகின்றார்களோ அதை நிச்சயம் இழந்து போவார்கள். அடிகாயங்கள் நரம்புவிறைப்பு, கைகால் தாக்கம், மூட்டுவலி என்பனவரும். இயந்திரத்துறை, வாகனத் துறை, நிர்வாகத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

கோபத்தை வென்றால் அதிக இலாபம் கிடைக்கும். இடமாற்றங்கள் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். அல்லது இழப்புக்கள் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வெள்ளி, சனி.

## கும்பம்

பாசத்தைவிட பணம் பெரிதா? சகோதரங்களால் பிரச்சினை வந்தது; பெற்றோரால் பேசி நிராகரிக்கப்பட்டேன் என அதிக உள்ளங்கள் வேதனைப்பட்டது போல நீங்களும் வேதனைப்படாதீர்கள் பொருளுக்காகப் போராட்டம் வீடு — வாகனம் யோகத்தை அடைபவராகவும் இனஜனங்களுடன் கருத்து வேற்றுமைப் படுவீர்கள். அரச அதிகாரிகள் உதவி செய்து தருவார்கள் தூரதேசச் செய்திகள் ஓரளவு மன ஆறுதலைத்தரும், கால் வீக்கம், தோல் வருத்தம், நாரிப்பிடிப்பு என்பனவரும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளல் நல்லதாகும். சட்டத்துறை, சமயத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன் பிற்பகல், சனி.

## மீனம்

கெட்டவர்களின் உறவால் வளர்ந்து வருவதாகச் சிலர் எண்ணலாம். அது காலப் போக்கில் கானல்நீராக மாறி அவர்களைத் திக்கற்றவர்களாக்கும். எனவே நிதானமாகத் தொழில் ஸ்தானத்தில் செயற்படவும். பொருள் வரவு, தூரதேசச் செய்திகள் தொழிலில் புதிய திட்டங்கள், மாற்றங்கள் என்பன ஏற்பட இடமுண்டு. எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். அல்லதுபல பிரச்சனைகள் உருவாகும். எதிர்ப்புக்கள் அதிகரித்தபடி இருக்கும். சளிக் காய்ச்சல், இரத்தநோய், கைகால்நோ, குளிர், உஷ்ண பீடைகள், பித்தரோகங்கள் என்பனவாகும். குருத்துறை, போக்குவரத்துத்துறை, கடல் வேலைகள், சந்தை வியாபாரம், கமிஷன் துறையினர் இலாபம் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன் பிற்பகல், சனி.


**ஆனந்தா கிழமைக் கலண்டர்**

❈ ஒரு கலண்டரில் நீங்கள் பார்க்க விரும்பும் முக்கியமானஎல்லாவிடயங்களும் அடங்கியது.

❈ தடித்த மட்டையில் ஒட்டிய பெரிய வண்ணப் படங்களுடன் விலை ரூபா 60 மட்டுமே.

**ஆனந்தா புத்தகசாலை**

226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்.

(சி/14559) தொலை பேசி இல :2820

**உடற்கல்வி மாணவ மன்றத்தின்**

**முதலாவது**

**ஆளுமை சஞ்சிகை வெளியீடும்**

**உடற்கல்வி வார**

**பரிசளிப்பு நிகழ்வும்**

**◂◂◂ 2000 ▸▸▸**

பிரதம விருந்தினர்: பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்புவிருந்தினர்: திருமதி தே. சிவாஸ்கரன்
(இணைப்பாளர், உடற்கல்வி கற்கைநெறி)

நாள்: இன்று [31-12-2000] ஞாயிற்றுக்கிழமை

நேரம்: முற்பகல் 9.30 மணி

இடம்: கைலாசபதி கலையரங்கம்.

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

உடற்கல்வி மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(82327)

# வசதி குறைந்த மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

வலிகாமம் மேற்கு, டிசெ.30 யாழ் மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள வசதியற்ற மாணவர்களுக்கு சீருடை, காகிதாதிகள், விசேட கொடுப்பனவு ஆகியவற்றை வழங்க சிறுவர் பாதுகாப்பு நிதியம் 9 லட்சத்து 22 ஆயிரத்து 500 ரூபாவை ஒதுக்கி உள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் 61 ஆயிரத்து 500ரூபாஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இருந்து 100 மாணவர்களுக்கு சீருடையை விநியோகிப்பதற்கு 3 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இருந்து 75 மாணவர்களுக்கு காகிதாதிகளை விநியோகிப்பதற்கு 2லட்சத்து 47 ஆயிரத்து 600 ரூபாவும், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இருந்து 20 மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவை வழங்குவதற்கு 1லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இருந்து பாடசாலை செல்வதற்கு பிறப்புச் சான்றிதழ்களைப் பெறமுடியாமல் இருக்கும் 150 பேருக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சீருடைக்கு ஒரு மாணவனுக்கு 230 ரூபாவும். காகிதாதிகளுக்கு ஒரு மாணவனுக்கு 220 ரூபாவும், விசேட கொடுப்பனவுக்கு ஒரு மாணவனுக்கு 350 ரூபாவும் பிறப்பு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருவருக்கு100 ரூபாவும்வழங்கப்படவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இந்தநிதியை பிரதேச செயலகங்களின் மூலம் வசதியற்ற மாணவர்கள் பெற்றுக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 1400 மாணவர்கள் சீருடைக்கும் 1050 மாணவர்கள் காகிதாதிகளுக்கும், 280 மாணவர்கள் விசேட கொடுப்பனவுக்கும், 2100பேர் பிறப்பு சான்றிதழுக்கும் இந்நிதியைப் பெறவுள்ளனர்.

பளைப் பிரதேச செயலர் பிரிவில் 100 மாணவர்கள் சீருடைக்கும். 75 மாணர்கள் காகிதாதிகளுக்கும், 20 மாணவர்கள் விசேட கொடுப்பனவுக்கும், 150 பேர் பிறப்பு சான்றிதழுக்கும் இந்த நிதியைப் பெறவுள்ளனர்.

இந்த நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியானவர்களை கிராமிய, பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவினரே தெரிவு செய்யவுள்ளனர். (இ-175)

## சிதம்பர அம்பலவாண சுவாமி மானாமுதலியார் மடம் பரிபாலனசபை - தொல்புரம்

மேற்படி சபையின்மாதாந்தபரிபாலன சபைக்கூட்டம் 23- 12-2000 ஆம்திகதி சனிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் தலைவர் திரு. அ. கிருபானந்த மனுநீதி (ஆசிரிய ஆலோசகர்) அவர்கள் தலைமையில் தேவாரம் ஓதுதலுடன் ஆரம்பமாகியது.

அவ்வேளை சபைத் தலைவர், காரியதரிசி திரு. ச. கந்தையா சபையின் தனாதிகாரியும், மனேஜருமான திரு இ சண்முகநாதன், சபை உறுப்பினர்களாகிய திரு. க விஜயவேல் (கிராம சேவை அலுவலர்). திரு சி. வெங்கடாசலபதி ஆகியோருடன் சபையின்கணக்காய்வாளர்திரு. சி. ஞானலட்சுமிபாலன் என்பவர்களும் சமுகமாயிருந்தனர்.

02- 12- 2000ஆம்திகதியில் நடைபெற்ற சபையின் பொதுக் கூட்டக் குறிப்பு காரியதரிசியினால் வாசிக்கப்பட்டு, ஆராய்வு செய்த வேளையில் 10- 12-2000 ஆம்திகதியில் 'உதயன்' பத்திரிகையில்பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் சபையால் தவறுதலாகக் கொடுக்கப்பட்ட செய்தியில் உள்ள வாசகங்களைத் திருத்தும்படி தீர்மானிக்கப்பட்டது.

★ சபையின் இருவருட என்பதனைத் திருத்தி புது வருட பரிபாலன சபைக்குப் பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள் எனவும்,

★ மேலும் சபையின் உபதலைவரான திரு. ஞா. சிதம்பரநாதன் ஜே. பி. அவர்கள் என்பதை சபை ஏகமனதாகத் திருத்தி தீர்மானித்ததுடன் திரும்பவும் இந்த விவரங்களை பத்திரிகையில் விளம்பரம் செய்யும்படியும் கேட்டுக் கொண்டனர்.

★ மேலும் சபைக்குரிய காணிகளில் பயிர்செய்பவர்களையும், குடியிருப்பவர்களையும் சபையுடன் தொடர்பு கொண்டு அவற்றிற்குரிய குத்தகைப் பணத்தையும் செலுத்தி தர்மகைங்கரியவளர்ச்சிக்கும் உதவி புரியும் படியும் கேட்டுக்கொள்கிறோம்.

ஞா. சிதம்பரநாதன் J.P. — உபதலைவர்
ச. கந்தையா — செயலாளர்

(82831)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு விஜயரத்தினம் (மானிப்பாய்)

மானிப்பாய் டச்சு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான வழிபடுவோர் சங்கத் தலைவரும், மானிப்பாய் மருதடி விநாயகர் சனசமூக நிலையப் போசகருமான கதிரவேலு விஜயரத்தினம் நேற்று முன்தினம் (29-12-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - தங்கம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும், தேவகியின் (துளசி) அன்புக் கணவரும், விபுஷனின் (உடுவில் மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சின்னையா, செல்லம்மா ஆகியோரின் மருமகனும், புஸ்பமலர், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேஸ், செல்வநாயகம், நித்தியானந்தன் (கனடா), சரவணபவன் (கனடா), யசோதா (கோப்பாய் மகா வித்தியாலயம்), கிருஸ்ணகுமாரி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனரும், முரளிதரன் (புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி), முருகதாஸ் (யாழ். போதனா வைத்தியசாலை), இந்துமதி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 30-12-2000 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தேவகி (மனைவி)

டச்சு வீதி,
மானிப்பாய். (82305)

## OBITUARY

### LIONEL B. TAMBYRAJAH
(ATTORNEY - AT - LAW)

Beloved Husband of Shanthy, Passedaway in Colombo after a brief illness. Funeral Today At 3.00 p. m.

Intimated By:
Jeba Kadirgamar
(Brother - in -Law).

C/o S. J Jebaratnam
51, Yasodara Mawatha,
Off Sri Saranankara Road,
Dehiwela - T. Phone -- 730633 (82332)

## மரத்தால் வீழ்ந்து காயம்

பனை ஏறியவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அனலைதீவு மூன்றாம் வட்டாரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த அந்தோனி மகேந்திரன் (வயது — 28) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

கடந்த புதனன்று பனையால் விழுந்தவரை கடல் கொந்தளிப்பு மற்றும் மழை காரணமாக நேற்று முன் தினமே யாழ்ப்பாணம் எடுத்துவர முடிந்ததாகவும்—

அனலைதீவு வைத்தியசாலையில் நடமாடும் சேவை மூலம் ஒரு வைத்தியர் குறிப்பிட்ட தினங்களுக்கே கடமைக்கு வருவதாகவும் சம்பவதினமான புதன்கிழமை இவர் வராததால் மரத்தால் விழுந்தவரை கடுமையாகச் சிரமப்பட்டே நேற்று முன் தினம் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டதாகவும் நோயாளியின் உறவினர் ஒருவர் தெரிவித்தார். (இ—6—5)

## யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

1) மேற்படி பாடசாலை மீண்டும் பழைய இடத்தில் இயங்க உள்ளதால் சகல மாணவர்களும் 02-01-2001 அன்று தவறாது சமுகமளிக்கவும்.
2) ஆறாம்தர அனுமதிக்காக விண்ணப்பித்தவர்கள் பின்வரும் ஆவணங்களுடன் 05-01-2001 அன்று காலை 9.00 மணிக்கு பாடசாலைக்கு வருகை தரவும்.

(I) பாடசாலை விடுகைச் சான்றிதழ்
(II) பிறப்புச் சான்றிதழ்
(III) வசதிகள் சேவைகள் கட்டணம் 60 ரூபா

வி. மாணிக்கம்
அதிபர்

(சி/14560)

## முக்கிய அறிவித்தல்

அளவெட்டி வடக்கு
சீனன் கலட்டி ஞானோதயா
வித்தியாசாலையின் பழையமாணவர் சங்க
அங்குரார்ப்பணக் கூட்டம்

எதிர்வரும் 07 — 01 — 2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில். பாடசாலை மண்டபத்தில் திரு சு. கணேசமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளதால் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழையமாணவர்கள் சார்பில்
ஏற்பாட்டுக்குழு,

(82352)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும், மாவட்டத்தலைவருமான
லயன் S. P. சிவஞானம் LLB.
அவர்களின் பாசமிகு மாமியாராகிய

### திருமதி தங்கமுத்து மாணிக்கவாசகர்

அவர்கள் சிவப்பேறு எய்தியமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– லயன்ஸ் கழகம், சுன்னாகம்.

(82337)

## முடிவிலா இன்பத்தில் மூழ்கித் திளைத்திடும் எம் அன்புத் தெய்வத்தின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ — 30 – 07 – 1951



கண்நெகிழ — 04 – 01 – 1998

திருமதி
### கமலபாரதி சரவணமுத்து
திதி: 31–12–2000

உன் இனமும் என் இனமும் வெருண்டு ஓடுதம்மா
வசதி இருந்தும் ஏன் அம்மா ஓடுகினம்?
வசதி இல்லாவிட்டால் பார்ப்பார்களா?
இவர்களை ஓட வைத்தவன் யாரம்மா?
தெய்வமே, தெய்வமாய் இருந்து எங்களைக்
காப்பாற்றம்மா!

ஆண்டு மூன்றுக்குள் இவ்வளவு நிகழ்வுகள்.

அன்பு உள்ளங்கள் எங்களை கொக்குவில் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் வைத்து ஆதரிப்பது இவர்களுக்குத் தெரிகிறதா?
ஓம் சாந்தி! பாபா! பாபா;

கணவன் (பிள்ளையப்பு),
பிள்ளைகள்.

கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை
K. K. S வீதி,
யாழ்ப்பாணம். (82347)

# தித்திக்கும் திருவெம்பாவையை ஓதி

# முத்திக்கு வழி தேட முயன்றிடுவோம்

இன்று திருவெம்பாவை ஆரம்பம்.

மார்கழி மாதம் பிறந்து விட்டாலே மகிழ்ச்சி தான். மகத்துவம் மிக்க இந்த மார்கழியில் மாணிக்கவாசகர் அருளிச் செய்த 'திருவெம்பாவை' மிக முக்கியத்துவம் பெறுகிறது திருவாசகமாகிய தேனில் இந்தத் திருவெம்பாவை மிகவும் இனிப்பான துளிகள். தேன் தானும் கெடாது; தன்னைச் சார்ந்தவர்களையும் கெடவிடாது. அதேபோலத்தான் திருவாசகமும்.

மாணிக்கவாசகரின் வாசகத்தை ''தேன் கலந்து தித்திக்கும் தெள்ளமுது'' என்றும் ''நற்கருப்பஞ்சாறு'' என்றும் ''பிறவிப் பிணியறுக்கும் அருமருந்து'' என்றும் நம் முன்னோர் கூறியுள்ளனர்.

''தொல்லையிரும் பிறவி சூழுந்தளை நீக்கி அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே— எல்லை மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன் திருவாசகம் என்னுந் தேன்'' என்ற பாடல் இதன் அருமையையெடுத்தியம்புகின்றது

அல்லல் அறுத்து ஆனந்தம் தரவல்ல இந்தத் திருவெம்பாவைப் பாடல்கள் படிக்குந்தோறும் உவகை தரவல்லன. 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று பரமசிவனாலேயே பணிக்கப்பெற்ற அருமையை உடையது திருவெம்பாவை.

''முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே! உன்னைப்பிரானாகப் பெற்ற உன்சீரடியோம் உன்னடியார் தாள் பணிவோம்; ஆங்கவர்க்கேபாங்காவோம்'' என உறுதிபடக் கூறி இத்திருவெம்பாவை விரதத்தை அனுட்டிக்கின்றனர் கன்னிப் பெண்கள்.

பொதுவாக இந்த விரதம் பெண்களுக்கேயுரியது. சில பெருமானுக்குத் தொண்டு செய்வதையே தமது திருத்தொண்டாகக் கருதி வாழும் கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்தே இதனை அனுஷ்டிப்பர்

''கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காமல் விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக் கண்ணுக்கு இனியானைப் பாடிக்கசிந்துள்ளம் உள்நெக்கு நின்றுருக யாம் மாட்டோம்'' என்ற திருவெம்பாவை அடிகள் இங்குகருத்தில் கொள்ளத்தக்கன.

## திருமதி சத்தியபாமா

'அரிது அரிதுமானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஒளவையார். ஆகவே பெறுதற்கரிய பிறவியாகிய மானிடப்பிறவி எடுத்த நாம் அதன் அருமை பெருமையையுணராமல் தான்தோன்றித்தனமாய் நடப்பது அறிவீனம். ஆகவே ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கான வழிவகைகளை நாம் இப்பிறவியிலேயே தேடிக் கொள்ளவேண்டும்.

சைவப் பெருமக்கள் ஒவ்வொருவரும் அதிகாலையில் நீராடி ஆலயதரிசனஞ்செய்து சிவானுபவத்தில் மூழ்கித் திளைப்பதற்கு இத் திருவெம்பாவைக் காலம் மிகவும் உகந்தது.

திருவீதிகள் தோறும் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிக்கொண்டுவரும் அடியார்களின் அருட்டிறம் போற்றுதற்குரியது.

அன்பினில் விளைந்த ஆரமுதாகிய ஆண்டவனைக் கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்ப உள்ளம் கசிந்துருகிப் பாடவைக்கும் தன்மை நிறைந்த திருவெம்பாவை நமக்குக் கிடைத்த அரும்பெரும்பொக்கிஷமாம்.

சைவ ஆலயங்கள் தோறும் இன்று முதல் அதிகாலை வேளையில் மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்பன பக்திப் பரவசத்துடன் ஓதப்படும். விரதமிருக்கும் அடியார்கள் எம்பெருமானுக்கு வேண்டிய அபிஷேகத் திரவியங்களும் பஞ்சகௌவியமும் வில்வம். இளநீர், பத்திரபுஷ்பம் முதலானவற்றைக் கொண்டு போய்க் கொடுத்து இறைவனின் திருவருளுக்குப் பாத்திரராவர்.

''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து'' என்று சிவபுராணத்தில் கூறிய படி சைவ மக்கள் ஒவ்வொருவரும் இத் திருவெம்பாவை நாள்களில் சிவாலய தரிசனஞ் செய்து பிறவி எடுத்ததன் பயனைப் பெறுவர்களாக.

# பாடசாலை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.31

கடந்த சில காலமாக மூடப்பட்டிருந்த மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம் மீண்டும் திறக்கப்பட உள்ளது.

இது தொடர்பான நிகழ்வு இன்று பகல் 11 மணிக்குபாடசாலையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகனும் கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா, அவர்களும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண பிதா ய.பே.ஞானப்பிரகாசம் அடிகளாரும் சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.தனபாலசிங்கமும் கலந்து கொள்வர். (ம)

## தீக்காயம்

மாமிக்கும் - மருமகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறினால் ஆத்திரமடைந்த மருமகள் தனது உடலில் தீயை மூட்டி எரிகாயங்களுக்கு உள்ளானார்என்று கூறப்படுகிறது.

இச் சம்பவம் கடந்தவாரம் துன்னாலை தக்குச் சம்பாதி எனற இடத்தில் இடம்பெற்றது.

எரி காயங்களுடன் மந்திகை மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-109

## சமய சந்நிதியில்

திருநெல்வேலி, டிசெ. 31

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய விநாயகர் ஷஷ்டி உற்சவப் பூர்த்தி நாளான இன்று மாலை 4,30 மணியளவில் திரு வீதி உலா இடம்பெறவுள்ளது.

அத்துடன் இந்த ஆலயத்தில் இன்று காலை முதல் திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகிறது. (ஐ-3)


மகாகணபதி ஹோமமும் அஷ்டோத்தர சத

**சங்காபிஷேகமும் (108)**

யா/வண். நீராவியடி வீரகத்தி விநாயகர்

ஆலயத்தில் 31-12-2000 ஞாயிற்றுக்கிழமை

காலை 8 மணிக்கு பிள்ளையார் பெருங்கதையை முன்னிட்டு மகாகணபதி ஹோமமும், அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் (108) விஷேச பூஜையும் நடைபெற்று, சுவாமி உள்வீதி வெளிவீதி வலம்வரும் காட்சி இடம் பெறும்.

யோ. ரஞ்சிதக்குருக்கள்—

(82368) ஆலயகுருவும பிரதமகுருவும்,


# பிரார்த்தனை என்பது பெயருக்கல்ல

# அது இறை-மனித உறவின் மூலம்!

இறைமகன் இயேசுவினது வாழ்வின் வெற்றியின் இரகசியம் எதுவெனில் அது அவருக்கும் இறைவனுக்கும் இடையிலிருந்த உறவுத் தொடர்பும் பிரார்த்தனையால் அமைந்த சீருள்ள வாழ்வே இயேசுக்கிறிஸ்து தனது வாழ்வில் ஒருபோதும் பிரார்த்தனை செய்யத் தவறியதில்லை ஊழியங்களைச் செய்து கொண்டிருந்த போதும் கூட அவர் பல வேளைகளில் தனியே போய் இருந்து செபம் பண்ணினார். அவரது பிரார்த்தனை இறக்கும் வரை தொடர்ந்து கொண்டே இருந்தது. மரண பரியந்தம் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போதும் அவர் கூறிய பிரார்த்தனையின் வார்த்தைகள், நாம் மரண பரியந்தம் எமக்காக மட்டுமல்ல மற்றவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்பவர்களாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது அல்லவா?

எமது செபம் சம்பிரதாய பூர்வமானதாக அல்ல, அடிமைத்தளத்திலிருந்து உண்மையான செப வாஞ்சையுடன் வெளிவர வேண்டியதாயுள்ளது. யூதர்கள் பிறர்பார்க்கும் வண்ணமாகத் தெருக்கோடியில் நின்று கொண்டு ஜெருசலேமை உள்ள திசையை நோக்கிச் சத்தமாகச் செபம் பண்ணுவதனை வெளிவேடச் செயல் என்று இயேசு கண்டிக்கிறார். எமது செபங்கள் மற்றவர்களது பாராட்டினை எமதாக்கிக் கொள்வதற்காக அல்ல, மாறாக எமக்கும் இறைவனுக்குமிடையிலான உறவுப் பாலத்தை இறுக்கமாக்கவும், எமது சமூக அக்கறையில் இருந்து வெளிவரும் அவாக்களை நிறைவாக்கவும், மனிதர்களாய் வாழாத மனிதர்களை மனிதர்களாக்கவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

செபம் என்பது வார்த்தைச் சாலங்களல்ல. அது எமக்கும் இறைவனுக்குமிடையிலான உறவின் அடிப்படையிலானதாகும். ஒரு தோடம்பழத்தினைக் கையில ஒருவர் வைத்துக்கொண்டு, ''இது புளிப்பா, இனிப்பா?'' என்று இன்னொருவரைப் பார்த்துக் கேட்டால் அந்த இன்னொருவரால் பதில் கூறிவிட முடியுமா? இல்லவே இல்லை. அந்தத் தோடம்பழத்தினை ருசித்துப் பார்த்தால்தான் அவரால் அதன் சுவையை உணர்ந்துகொள்ள முடியும். அது போன்றே தான்—இறைவனை உருசித்துப் பார்க்காமல் அவர் தரும் ஆசீர்வாதங்களை எவரும் உணர்ந்து கொண்டுவிட முடியாது. இறைவனைத் தம் வாழ்வில் மறைமுகமாகத் தரிசனம் செய்தவர்களால் மாத்திரமே பிரார்த்தனையின் அருமைத் தன்மையையும், அதனால் கிடைக்கின்ற சுகங்களையும் உணர்ந்து கொள்ள முடியும்.

நாம் செய்ய வேண்டியது என்ன? எம்மைத் தாழ்த்தி, எம் பெருமைகளை யெல்லாம் அகற்றி, எம்மை இறைவனுக்கு ஒப்புவிக்க வேண்டும். எமக்கும் இறைவனுக்கும் இடையிலான தகப்பன், தாய்—மகன் எனும் உறவை வளர்த்துக்கொள்ள செபமே எமது வாழ்வாக அமைய வேண்டும். செபம் என்பது தனியே நேரம் ஒன்றை ஒதுக்கி அந்நேரத்திற்குள் செய்வது மாத்திரமல்ல; நாம் என்ன வேலையில் ஈடுபட்டிருந்தாலும், எங்கு இருந்தாலும் நாம் செபம் செய்து கொள்ள முடியும். எமது வாழ்வில் செபம் என்பதைவிட எமது வாழ்வே செபமாக மாறி விட வேண்டும்.

செபத்தின் வல்லமையை எமது வாழ்வில் நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோமா? அது தரும் ஆற்றலை அனுபவித்திருக்கிறோமா? அவ்வாறு இல்லாவிடில் அதை அனுபவித்து விட வேண்டும் எனும் ஆவல் இப்போது எமக்குள் எழுந்திருக்கிறதல்லவா? அவ்வாறெனில் இறைவன் உங்கள் அருகில் உள்ளார் என்பதை நீங்கள் உணர்ந்துவிட்டீர்கள். இனி உங்கள் வாழ்வு ஆசீர்வாதமானதாக அமையும். ஏனெனில் நீங்கள் செபவீரராய்த்திகழ்ந்தீர்மானித்து விட்டீர்களே சிந்தித்துச்செயற்படுவோம்.

**அருள் திரு.**

**பீ. தேவதாஸ்**


# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர்

S. P. தயாளன்

அவர்களின் அன்புச் சகோதரி

**யோகேஸ்வரன் சுதர்சினி**

அவர்கள் 30-12-2000 நேற்றுக் காலமானதையிட்டு எமது சங்கத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடல்வள டிப்ளோமா

பட்டதாரிகள் சங்கம்.

(82365) யாழ்ப்பாணம்:

# கண்ணீர்க் காணிக்கைகள்

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின்

H. N. D. M. 3ஆம் வருட மாணவன்

த. சிறிகரன்

அவர்களின் பாசமிகு தந்தையாரான

**அமரர் இ. தம்பு**

அவர்கள் 29-12-2000 அன்று காலமானார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3 ஆம் வருட மாணவர்கள்,

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனம்.

(82356)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

க. அரசரத்தினம்

அவர்களின் தந்தையார்

**வே. கந்தையா**

அவர்கள் 28-12-2000 அன்று இறைவனடி எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமையாளரும், பணியாளர்களும்,

மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை.

(82360)

# விஞ்ஞான பீடம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

விஞ்ஞான பீட மாணவர்கள் அனைவருக்குமான கூட்டமொன்று 01 - 01 - 2001 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கனகசபாபதி மண்டபத்தில் நடைபெறும். சகல மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விஞ்ஞான பீடாதிபதி

(82362)

# மரண அறிவித்தல்கள்

## சீனிவாசகம் சுப்பிரமணியம்

கோப்பாய் வடக்கு பிராமனோடையை வசிப்பிடமாகக் கொண்ட சீனிவாசகம் சுப்பிரமணியம் நேற்று (30 - 12 - 2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா — கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மல்லிகாதேவி (சுவிஸ்), கிருபாசக்தி, காலஞ்சென்ற பரமேஸ்வரன், காலஞ்சென்ற பாஸ்கரன், பராசக்தி (லண்டன்), கிருஸ்ணமூர்த்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன் (சுவிஸ்), கருணேந்திரன், சிறீகரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், தனுஷயன், ரவிதாஸ், கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31 - 12 - 2000) ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் கோப்பாய் தெற்கு, V. C அடி இல்லத்தில் நடைபெற்று உரும்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்:
இ. கருணேந்திரன்
(மருமகன்)

கோப்பாய் தெற்கு. (82372)

## பேரின்பரெட்ணம் ஆஞ்சலோ ஜெயசீலன்

பேரின்பரெட்ணம் ஆஞ்சலோ ஜெயசீலன் அவர்கள் 26-12-2000 அன்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் பேரின்பரெட்ணம், திருமதி மேரியோசப்பின் பேரின்பரெட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம்) ஆகியோரின் அருமை மகனும், காலஞ்சென்ற இன்பராணி, ரெட்ணராஜா, வசந்தராணி, காலஞ்சென்ற அழகேந்திரன், வத்சலா (ஆசிரியை, யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), செல்வக்குமார், வசந்தராணி ஆகியோரின் அருமைச் சகோதரரும் யேசுதாசன், சண்முகதேவன், ஜெயராணி, பற்றிமா, பற்பநாதன், கலையரசி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 02-01-2001 அன்று ஜேர்மனியில் நடைபெறும்.

அன்று ஆன்ம இளைப்பாற்றி ஆராதனையாக காலை 6.45 மணிக்கு (புதிய நேரம்) மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
தாயார்

நிரந்தர விலாசம்:
89/2, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை.

தற்காலிக விலாசம்:
லோட்டன் றோட்,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(82366)

## திருமதி முருகேசு செல்லம்மா

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது தாவடி தெற்கில் வசித்தவருமாகிய திருமதி முருகேசு செல்லம்மா 29—12—2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் சிவபாக்கியம் (பொது நூலகம், சுன்னாகம்), தங்கபூபதி [ப. நோ. கூ. ச. கைதடி], கோகுலவதி, சோமவதி [சுவிஸ்], சிவசக்திவேல் (சுவிஸ்), கலாவதி [சுவிஸ்], காலஞ்சென்றவர்களான ஞானபூபதி, ஞானசக்திவேல், குகானந்தவேல் மற்றும் மகானந்தவேல் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும் சோமசுந்தரநாதன், சிவச்சந்திரராஜா (கிறைண்டிங் மில், கைதடி], சண்முகரத்தினம் [சுவிஸ்], சுந்தரேஸ்வரன் [சுவிஸ்], நிர்மலா [சுவிஸ்], ஜெயக்குமார் [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்—நாகமுத்து, செல்லம்—சின்னப்பிள்ளை மற்றும் கதிர்காமு [தண்ணீரூற்று], சொக்கநாதன்—நல்லம்மா [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவச்சந்திரராஜா (மருமகன்)
(சின்னக் கந்தசாமி)
கைதடி மேற்கு, கைதடி.

தற்காலிக முகவரி:-
செ. பரதன்,
நாதன் [illegible] கராஜ்
இந்து வேம்படி,
தாவடி தெற்கு, கொக்குவில். (82358)

# இந்தியர்களுக்கு எதிராக நேபாளத்தில் கலவரம்

## 4 பேர் பலி; சொத்துக்களும் சூறை!

காத்மண்டு, டிசெ. 31

நேபாளத்தில் பரவிய இந்தியர்களுக்கு எதிரான வன்முறைக் கலவரத்தில் 4 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 180 இந்தியர்கள் காயமடைந்துள்ளனர். சொத்துக்களும் சூறையாடப்பட்டன.

இந்தித் திரைப்பட நடிகர் ரிதிக் ரோஷன் தொலைக் காட்சிப் பேட்டியொன்றில் நேபாளத்தையும், அதன் மக்களையும் வெறுப்பதாகக் கூறியதாக செய்திகள் சில நாள்களின் முன்னர் பரவின.

இதனால் ஆத்திரமுற்ற நேபாள மக்கள், ரோஷன் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்று நேபாளத்தில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் இநதியர்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களாக உருவெடுத்துள்ளன.

தலைநகர் காத்மண்டுவிலும், பிற பிரதேசங்களிலும் இந்தியர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டதுடன் தீ

உலக அரங்கில்

வைத்துக் கொளுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வன்முறையில் 4 இந்தியர்கள் பலியானதாக நேபாள அரசு கூறியுள்ள போதிலும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம் என்று உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்முறைகள் தற்போது கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாகத் தெரிவித்த நேபாள அரசு இந்தியர்களுக்கு எதிரான தாக்குதல்கள் எவ்வாறு ஆரம்பித்தன என்று கண்டறிய குழு ஒன்றை அமைத்துள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்தியர்களின் உயிர்கள் மற்றும் உடைமைகளைப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யப் பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உலகின் ஒரேயொரு இந்து நாடான நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே வகுப்புவாத வெறுப்புணர்வை தோற்றுவிக்க திட்டப்பட்ட சதியே இது என்று நேபாளப் பிரதமர் ஜி. பி. கொய்ராலா தெரிவித்துள்ளார்.

இந்தித் திரைப்பட உலகில் ஷாருக்கான், சல்மான்கான் போன்ற முஸ்லிம் நடிகர்களே முன்னணியில் உள்ளனர். இவர்களுக்கு பாதாள உலகத் தலைவனான தாவூத் இப்ராகிம் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது சர்ச்சையில் சிக்கியிருக்கும் முஸ்லிம் அல்லாத ரிதிக் ரோஷன் உச்ச நட்சத்திரமாவதைத் தடுக்கவும் —

இந்துத்துவ அமைப்பான பாரதிய ஜனதாவுக்கும் இந்து நாடான நேபாளத்துக்கும் இடையே பிளவை ஏற்படுத்தவும் அதன் மூலம் நேபாளத்தில் இந்து ஆட்சியை அகற்றவும் — பெரும் சதி வலை பின்னப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகாரத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## சீனத் தீ விபத்து தொடர்பாக 12 பேர் கைது

பெய்ஜிங், டிசெ. 31

சீனாவில் நத்தார் கொண்டாட்டம் நடந்த நடன அரங்கில் தீ விபத்து ஏற்பட்டு 309 பேர் உயிரிழந்தது தொடர்பாக 12 பேரை சீனப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

விபத்துஇடம்பெற்ற 6 மாடி வர்த்தகக் கட்டடத்தின் பொது மேலாளரும் கைதானவர்களில் அடங்குவார்.

கட்டடத்தில் அவசர காலத்தில் வெளியேறப் பயன்படும் வாசல்கள் பராமரிப்பின்றி திறக்க முடியாத நிலையில் இருந்ததாலேயே உயிரிழப்புகள் அதிகரித்ததுக்குக் காரணம்என்று பொலீஸார் கூறினர். (ஒ)

## கிளின்ரனின் பயணம் ரத்து

வாஷிங்ரன், டிசெ. 31

ஏவுகணை வர்த்தகப்பேரம் ஒன்றிற்காக வட கொரியா செல்ல விருந்த அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் பயணம் ரத்துச் செய்யப்பட்டது.

வடகொரியாவுடன் நெருக்கமான ராஜரீக உறவுகளை ஏற்படுத்துவதில் அவசரம் காட்ட வேண்டாம் என்று குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே கிளின்ரனின் பயணம் ரத்துச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## பாகிஸ்தானில் குண்டுவெடித்ததில் இளம் பெண் பலி; 4 பேர் காயம்

இஸ்லாமாபாத், டிசெ, 31

பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இளம் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். 4 பேர் காயமடைந்தனர்.

கராச்சி நகரின் தென்பகுதியில் உள்ள ஜாஷி-இ-மொகமட் என்று அழைக்கப்படும் காஷ்மீர்த் தீவிரவாத அமைப்பின் தலைமையகக் கட்டடத்தின் வாயிலில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது.

இதில் அந்தப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த இளம் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். வேறு 4 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஆண்டு டிசெம்பரில் இந்தியன் எயார் லைன்ஸ் விமானத்தை நேபாளத்தில் இருந்து ஆப்கானிஸ்தானுக்குக் கடத்திச் சென்ற கடத்தல்காரர்கள் ஜாஷி-இ-மொகமட் என்ற மேற்படி அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று இந்தியா குற்றஞ்சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## சூரியத் கட்சியினருக்கு கடவுச்சீட்டு

ஶ்ரீநகர், டிசெ. 31

காஷ்மீர் தீவிரவாத இயக்கங்களின் கூட்டமைப்பான குரியத் மாநாடு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருக்கு இந்திய அரசு கடவுச் சீட்டுக்களை வழங்கியுள்ளது.

தற்போது இந்தியா அறிவித்துள்ள தாக்குதல் நிறுத்தத்தைப் பயன்படுத்தி குரியத் கட்சியினர் பாகிஸ்தானுக்குச் சென்று அங்குள்ள தீவிரவாத அமைப்புகளுடன் பேசி அவற்றைச் சமாதானப் பேச்சுக்கு சம்மதிக்க வைக்கவே கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

# கண்ணீர் அஞ்சலி

முதலாம் வருட வணிகபீட மாணவனாகிய
த. சிறீகரன் அவர்களின்
அன்புத் தந்தையான
**அமரர் தம்பு** அவர்கள்

30-12-2000 அன்று காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் எமது நண்பர் சிறீகரனுக்கும், அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதலாம் வருட வணிகபீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக் கழகம்.

(82373)

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லையா அரியமலர்

தொல்புரம் கிழக்கு மடத்துப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சாத்திரியார் நல்லையா அவர்களின் மனைவி அரியமலர் நேற்று (30 - 12 - 2000) காலமானார்.

அன்னார் உருத்திரகணேசன், புதல்வநாயகி, காலஞ்சென்ற தில்லைநாதன், கனகாம்பிகை மற்றும் கிருஸ்ணாம்பிகை, குணசீலன், தேவகி, பேரின்பம் ஆகியோரின் அன்புத் தாயாரும் பூமணி (கலைவாணி முன்பள்ளி ஆசிரியர், வடலியடைப்பு), குணநாயகம், தங்கத்துரை, சிவமலர் (காரைநகர்), கமலேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
ஐ. நல்லையா
(கணவன்)

டச்சு றோட்,
தொல்புரம்.

(சி/14575)

# சைவர்கள் நெஞ்சை விட்டகலாத ஆசான் நீர்வை சுவாமிநாத. ராஜேந்திரக்குருக்கள்

நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்து உருகத் தஞ்சத் தருள் சண்முகனடியில் -

உருவாய் அருவாய் உளதாய் இலதாய் மருவாய் மலராய் மணியாய் ஒளியாய் கருவாய் உயிராய் கதியாய் விதியாய் குருவாய் வருவாய் அருள்வாய் குகனே என்று தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நீர்வேலி இராஜேந்திரக்குருக்களை இழந்து, நீர்வேலி வாழ் சைவ மக்கள் தம் உடம்பின் ஓர் அங்கத்தை இழந்தவராகித் தவிக்கின்றார்கள்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஆலயங்களும் குருவுமே முதற் காரணம். வேண்டுவோர் வேண்டுவதை அன்போடு ஏற்று இறைபக்தியுடன் கிரியைகளை நெறிப்படுத்தி பக்தர்களை இறைவனிடத்தில் அன்பு பெற வைப்பது குருவின் கடமையாகும். நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் 50 வருடங்களாக நித்திய நைமித்திய குருவாக இருந்து வழி நடத்தினார் இராஜேந்திரக்குருக்கள்.

## நீத்தார் நயப்புரை

1922ஆம் ஆண்டு சித்திரை திங்கள் 22ஆம் நாள் புனர்பூச நட்சத்திரத்தில் சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் - வாலாம்பிகை அம்மா தம்பதிகளின் ஆறு மக்கள் செல்வத்தில் ஒருவராக இராஜேந்திரக்குருக்கள் தோன்றினார்.

எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய குருக்களை "தாத்தா" என அழைப்போம். கலியுகவரதன் தன் ஞானசக்தி அருட்பார்வையை நேரில் கொடுத்தது போல அவருக்கும் முருகனுக்குமிடையேயான தொடர்பு வளர்ந்தது. முருகநாமம் அவர் நாவில் இடைவிடாது வந்தபடி இருக்கும். சிவஸ்ரீ பூர்ணானந்தக்குருக்கள், சோமாஸ்கந்தக்குருக்கள் சீதாராம சாஸ்திரிகள், கைலாசநாதகுருக்கள் போன்ற மஹான்களோடு கிரியைகள் ஆற்றிய பெருமைக்குரியவர்.

சமஸ்கிருதம், தமிழ்இலக்கியம், இலக்கணம், சிற்பசாஸ்திரம், சோதிடம் போன்றன இவருக்கு கைவந்த கலைகள். கந்தபுராணத்துக்கு பயன் கூறுவதில் அந்தணர்களுக்குள்ளே தனிச்சிறப்புப் பெற்றவர். 'சுப்பிரமணிய பிரதிஸ்டாவிதி', 'சுப்ரமண்யம்' இரண்டு தடவை வெளியீடு செய்ததுடன் தமிழ்ப்புத்தகங்கள் பலவற்றை அச்சிட்டும் வெளியிட்டுள்ளார்.

வெள்ளி, செவ்வாய் தினங்களில் ஆலய வாசலில் விபூதி ஜெபம் செய்து நூல் கட்டி தம் பிணி தீர்த்துக் கொள்ள திரண்டிருக்கும் அடியார் கூட்டத்திற்கு அன்போடு அதனைச் செய்வார்.

ஆறு ஆண்டுகள் இவரோடு இணைந்து பல கும்பாபிஷேக கிரியைகளில் பங்குபற்றிய நான், சில கிரியைகளை தமக்குரிய தனிப் பாணியில் விஸ்தரித்துச் செய்வதைக் கண்டிருக்கிறேன். கலாகர்ஷணம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், நியா சாதிகள், கும்பாதி பிம்ப நியாசம் இவருடைய கிரியைகளின் சிறப்பு அம்சங்களாக அமையும்.

ஆலய கட்டட அளவுகள், அமைப்புக்கள் நிர்மாணிப்பதில் பெயருக்கேற்ப இராஜாவாகவே விளங்கினார்.

வரணி கிராமத்தின் பரம்பரை குருக்களாக இருந்து சென்ற வருடம் முருகனின் கும்பாபிஷேகத்தை நிகழ்த்தினார். நெடியகாடு திருச்சிற்றம்பல விநாயகர் தேவஸ்தானத்தில் மனோகரக்குருக்களுக்கு உறுதுணையாகவும், சர்வபோதகமாகவும் இருந்து தமது இறுதிக் கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்தார்.

வடமராட்சி ஆலயங்கள் பலவற்றில் குருவாகவும், ஆலோசகராகவும் விளங்கி, சண்முகப் பெருமானுக்கு நியாசம், சண்முக அர்ச்சனை, மாவிளக்குப் போட்டு அர்ச்சனை செய்வதில் தம்மை மறந்திடுவார்.

உள்ளார்க்கு உதவிடும் பண்பும் சிற்றாரை நிந்திக்காத சீரிய பண்பும், பற்றோடு அனைவரையும் நேசிக்கும் குணமும் முற்றாக எமை நீங்காத



குருக்கள் செயல் மறவோம் இப்புவியில்.

தன்வாழ்க்கையில் அரிய பெரிய சாதனைகளை நிலைநாட்டி, சைவ மக்களைத் தம்வசப்படுத்தி பூரண வாழ்வு வாழ்ந்த குருக்கள் தம் இறுதிக்காலத்தில் சிறிது சுகவீனமுற்று 20-12-2000 புதன்கிழமை தசமித் திதியில் இறைவனடி சேர்ந்தார்.

வித்வான் சர்வத்ர பூஜ்யதே -

கலியுகவரதன் கந்தப் பெருமான் அவர் வழியில் மைந்தரையும் வளரச் செய்து பணியாற்ற பிரார்த்தித்து அவர் குடும்பத்தாருடன் சேர்ந்து குருக்களின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திப்போம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

*சிவப்பிரம்மஸ்ரீ*
**ராம.கெங்காதரக்குருக்கள்,**
*சாரதா பீடம்*
*வடமராட்சி ஒன்றியச் செயலாளர்.*

# புலிகளின்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் பார்க்கப் போனால் கடந்த நவம்பர் மாதம் 24ஆம் திகதி எவ்வாறானதொரு சுமையுடன் மேற்கு நாடுகளுக்கான தனது விஜயத்தை மேற்கொண்டாரோ அதற்கு மேலான சுமையுடனே நாடு திரும்ப வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார் என்பதே உண்மை.

### ஐ.தே.கவுக்குள் இழுபறி

இதேவேளை-

புலிகளின் யுத்தநிறுத்தம் தொடர்பாக தனது ஆதரவைத் தெரிவித்திருக்கும் ஐ.தே.கட்சிக்குள்ளே அதன் நிலைப்பாடு தொடர்பாக இழுபறி நிலையே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அத்துடன் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் 'சிஹலஉறுமய' போன்ற பேரினவாதக் கட்சிகள் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பைக் கடுமையாக சாடியுள்ளதுடன் அரசை அகோரப் பொறிக்குள் தள்ள மேற்கொண்ட புலிகளின் தந்திரோபாயமாகவே மேற்படி யுத்தநிறுத்த அறிவிப்பைச் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த யுத்தநிறுத்தத்தை சிங்கள ஊடகங்களும் கடுமையாகச் சாடியுள்ளன. புலிகளின் ஏமாற்றுப் பொறியாகவே அதனை அவை சுட்டிக்காட்டியுள்ளன. சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க பத்திரிகையான 'திவயின' தனது ஆசிரியர் குறிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:-

"இராணுவ ரீதியாகப் பின்னடைவைச் சந்திக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் என்று ஏமாற்று வார்த்தைகளைக் கையாள்வார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஆட்சியில் இருந்த அரசுகள் அப்பொறிகளில் சிக்கி விடுவதுமுண்டு. ஆகவே, இனிவரும் காலங்களிலேனும் இவ்வாறான ஏமாற்றுப் பொறிகளில் சிக்கிவிடாது நடந்து கொள்ள வேண்டும்" என அப் பத்திரிகை தனது ஆசிரியர் பந்தியை நிரப்பியுள்ளது.

'லக்பிம' பத்திரிகையும் மேற் கண்டவாறான ஒரு நிலைப்பாட்டையே கடைப்பிடிப்பதாகத் தெரிகிறது. அவ்விருப் பத்திரிகைகளும் தென்னிலங்கை சிங்கள மக்களை சமாதானப் பேச்சுவார்த்தை என்ற மனநிலையிலிருந்து வேறுபடுத்தி யுத்த சூழலுக்கு அவர்களை இட்டுச் செல்லவே கடந்த காலங்களிலும் முயன்றுள்ளன என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

அதேவேளை, மேற்படிப் பத்திரிகைகளின் நிலைப்பாடுகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பல்வேறு அமைப்புகள் தமது கருத்தை வெளியிட்டுள்ளன. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள 'காணாமல் போன படைவீரர்களின் உறவினர்களின் அமைப்பு' புலிகளின் இந்த சமாதான சமிக்ஞையை ஏற்றுக்கொள்ள அரசு தவறுமானால் தமது அமைப்பு நாடளாவிய ரீதியாக ஆர்ப்பாட்டங்களை நடத்தித் தமது எதிர்ப்பைக் காட்டப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

எந்த நோக்கத்திலேனும் புலிகள் விடுத்த யுத்தநிறுத்த அறிவிப்பை சாதகமான முறையில் பயன்படுத்தி நாட்டின் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வமத சமாதான அமைப்பு விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில தெரிவித்துள்ளது.

### வலுவடையும் எதிர்க் கருத்து

எவ்வாறாயினும், கொழும்பு அரசியல் வட்டாரங்களை உன்னிப்பாகக் கவனிப்போமேயானால் புலிகளின் மேற்படி யுத்தநிறுத்த அறிவிப்புக்கு எதிரான கருத்துக்களே படிப்படியாக வலுவடைந்து வருவதை அவதானிக்க முடியும். ஆனாலும், சர்வதேச ரீதியாக விடுக்கப்படும் பல்வேறுபட்ட அழுத்தங்கள் காரணமாக அரசாங்கத்துக்கு புலிகளின் சமிக்ஞையை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையும் தோன்றலாம். அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் அரசு தென்னிலங்கையில் தனது ஸ்திரப்பாட்டை உறுதி செய்து கொள்ள வேண்டிய சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும என்பது மட்டும் உண்மை. ❖

# மக்களின் மௌனத்தின் மொழியை துணிந்து பேசும் 'பேசாப் பொருள்'

மேடையில் விடிய விடியக் கூத்துக்களையும், நாடகங்களையும் ரசித்த பாரம்பரியரசிகர் கூட்டம் நிரம்பியது யாழ்ப்பாண மண். நாடகம் என்பது வேஷமிட்டு மேடையில் நடிக்கப்படுவது என்ற பொதுவான கருத்தே நம்மிடையில் ஊறியிருக்கின்றது.

ஆனால் உலக நாடகச் செல்வாக்கு மற்றும் புதியன தேடும் ஆவல் என்பன இன்றைய தமிழ்நாடக அரங்கச் சூழலையும் புதியபுதிய பரிமாணங்களில் பிரவேசிக்கச் செய்துள்ளன.

அரங்கில் நடைபெறுவதே நாடகம் என்ற நிலை மாறி அரங்கைச் சூழ்ந்துள்ள வெளியைப் பயன்படுத்தி ஆற்றுகை செய்யப்பட்டமை ஒரு மாற்றம். அவ்வகையில் சிதம்பரநாதனின் 'பொய்க்காலை'க் கூறலாம்.

## கலைச்சுடர்

அரங்கு என்றில்லாமல் தனியே வெளியை (Space) பயன்படுத்தி க.ரதிதரனின் 'அண்டவெளி' 1990களின் முற்பகுதியில் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இரவேளை வெண்மதியின் சமிக்ஞைகளையும், குரலையும், இருளையும் பயன்படுத்தி சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்ட 'அண்டவெளி' அப்போது துணிகரமான பரிசோத்த முயற்சியாகவும், வெற்றிகரமான கலையாக்கமாகவும் ஆர்வலர்களால் சிலாகித்துக் கூறப்பட்டது.

அவ்வகையில் வெளியைப் பயன்படுத்தி ஆற்றுகை செய்யப்பட்டதே 'பேசாப் பொருள்'. இது முற்றிலும் அரசியல் மயப்பட்ட அரங்கு (Political Theatre) ஆகும். இன்று யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவரிலும் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கின்ற உணர்வுகளை, வெளியே சொல்ல முடியாத நிலையில் அடக்கி - அமுக்கி - உள்ளுக்குள் பூட்டி வைத்திருக்கும் உணர்வுகளை வெளிக்காட்டுவதே 'பேசாப் பொருளின்' பிரதான குறிக்கோள்.

சாதாரண யாழ்ப்பாணக் குடிமகனாலோ அல்லது குடி மக்களாலோ தமது உணர்வுகளை வெளிக்காட்டக் கூடிய சூழல் இல்லை. ஆயுதப் படைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் சட்டங்களும், நேரடியாகவும்,மறைமுகமாகவும், அச்சுறுத்தும் ஆயுதப்படைகளதும் குழுக்களதும் நடவடிக்கைகளும் இத்தகைய கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு ஆப்பு வைத்துள்ள சூழல் இன்றுள்ளது.

தமது உணர்வுகளை வெளிக்காட்ட முடியாத நெருக்கடி நிலையில், பல்கலைக்கழகம் என்ற பாதுகாப்பான வெளியை (Safe Space) இனங்கண்டு அவ்வெளியில் நின்று தமது ஒடுக்கப்பட்ட உணர்வை வெளிக்காட்டியதே 'பேசாப் பொருள்' ஆற்றுகை (Perfomance) ஆகும்.

இவ்வாற்றுகை யாழ். பல்கலைக்கழகத்துக்குள் பல இடங்களிலும் நடைபெற்றது. ஒரு பிரமாண்டமான உருவம் பீரங்கிக் குழாய் மற்றும் பயங்கரங்கள் நிறைந்த அந்த உருவமே ஒடுக்கும் சக்தி. அந்த உருவத்தை பல்கலைக்கழக வீதியில் இழுத்து வந்தார்கள். அந்த உருவம் வரும் வழியில் இரத்தம் தோய்ந்து, கை, கால்கள் கட்டப்பட்டு சித்திரவதைப்பட்டவர்கள் பெருங்குரலெடுத்து அலறினார்கள். சற்றுத் தள்ளி அந்த உருவத்தோடு போரிட்டார்கள். ஆரம்பத்தில் அதனோடு போரிட்டு வெற்றி கொள்ள முடியாதவர்கள் இறுதியில் வெற்றி முகம் கண்டு, அந்த உருவத்தை உடைத்தெறிந்து தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்கின்றார்கள்.

பின்னர் அடக்கப்பட்ட தமது வாழ்வை எண்ணிக் கதறுகிறார்கள். வெற்றியை நினைந்து பெருமிதம் கொள்கிறார்கள். தமது தலைவனின் கவிதை மொழிகளை மீண்டும் மீண்டும் கூறி ஆர்ப்பரிக்கிறார்கள். கோயில மணியை ஒலித்து, தீபங்களை ஏற்றுகிறார்கள்.

இவ்வாறு தம்முள் ஒடுக்கப்பட்ட உணர்வுகளையும், எதிர்காலக் கற்பனைகளையும் பாதுகாப்பான அந்த வெளியில் நின்று ஆற்றுகை செய்தனர். 'பேசாப் பொருள்' பேசியது இதைத்தான்.

இவ்வாற்றுகையில் இன்னொரு சிறப்பு அம்சம் இதற்குப்பிரதி (Script) இல்லை. நெறியாளர் என்று ஒருவர் இல்லை. தமது உள்ளத்து உணர்வுகளே ஆற்றுகையாளரிலிருந்து பிறந்து, ஓர் அழகான அரங்கக் கோலமாக விரிந்துள்ளது.

## இவான்

இவ்வாற்றுகை பற்றிப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரான நாடக நெறியாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கும் போது, 'இது இக்கால கட்டத்தின் மிக முக்கியமான அரசியல் அரங்கு. இவ்வாற்றுகையில் வெளியைக் கையாண்ட விதமும், பயன்படுத்திய உத்தியும் சிறப்பானவை. எனினும் நாடகம் ஓர் இடத்தில் என்றில்லாமல் உதிரி உதிரியாக மாறி மாறி எல்லா இடங்களிலும் நடைபெற்றமை எல்லாப் பார்வையாளர்களும் முழுமையாக அவதானிக்கத் தக்க வகையில் அமையவில்லை' எனக் குறிப்பிட்டார். பேசாப் பொருளைப் பார்த்தவர்கள் அனேகர் முன் வைக்கும் விமர்சனமும இதுதான். ❖

### ஓய்வூதிய வவுச்சர்கள் கிடைக்கவில்லை

யாழ்.மாவட்ட 'உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான இந்தமாத ஓய்வூதியவவுச்சர்கள் இன்னமும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கப்பல் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டிருப்பதாலும் தபால் பொதிகள் எடுத்து வரப்படாததாலும் ஓய்வூதிய வவுச்சர்கள் இன்னமும் வரவில்லை என்று கூறப்பட்டது.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மூலம் ஓய்வூதியம் பெறுவோருக்கு கடந்த 11ஆம் திகதி முதல் இந்த மாத ஓய்வூதியம் வழங்கப்பட்ட போதிலும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் வவுச்சர்கள் இது வரை கிடைக்காதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

31-12-2000

செல்வி
கு.சிந்துஜா



இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த
**குலவேஸ்வரன் தபோஜினி** தம்பதிகளின்
அன்பு மகள் **செல்வி சிந்துஜா**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். சிந்துஜாவை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, ஐயாமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், மச்சாள் ஆகியோர் நல்லூர் முருகன் அருளால் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(C/14574)

- குடும்பத்தினர்,
சண்ரெக்ஸ்
(106, பெரியகடை வீதி,)

## பாராட்டுபசார விழா

கந்தரோடை கிராம அலுவலர் (J/200)
**லயன் கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு** அவர்கள்



அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக நியமிக்கப் பெற்றமையைப் பாராட்டு முகமாக இன்று (31.12.2000) ஞாயிறு பி.ப.2.00 மணிக்கு கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலைத் திறந்த வெளியரங்கில் பாராட்டுபசார விழா நடைபெறவுள்ளது.

திரு அ.தற்பரானந்தம் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விழாவுக்கு அனைவரையும் சமுகம் தருமாறு வேண்டுகின்றோம்.

*கந்தரோடை,*
*சுன்னாகம்.*

(C/14571)

பாராட்டு விழாக் குழுவினர்.
(கந்தரோடை மக்கள் சார்பில்)

## தென்மராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் எதிர்பாராத வகையில் படையினர் முன்னேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிதிவெடிகள், கண்ணிவெடிகள் அற்ற பிரதேசங்கள் ஊடாக படையினர் முன்னேறினர். படையினரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் புலிகள் பின்வாங்கிச் சென்றனர் என்றும் -

பின்வாங்கிச் சென்ற புலிகள் மீது படையினர் கடும் தாக்குதல்களை நடத்தியதில் அவர்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கி இரு படையினர் காயமடைந்தனர் என்றும் கூறப்பட்டது. (இ-ம-6)

## மினிசினிமா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த வீடுகளுக்குப் பரவாமல் தடுக்கப்பட்டது.இதேவேளை இவ்வாறான தீ விபத்துச் சம்பவங்கள் இடம் பெறும் போது யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவின் 3ஃ என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.பாலசிங்கம் தெரிவித்தார். (ம)

## மகனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காகவும் எமது வீட்டைப் பார்த்து வருவதற்காகவும் மிருசுவிலுக்குச் சென்றிருந்தார். இவருடன் எனது மருமகனும் பேரனும் கூடச் சென்றிருந்தனர். அவர்கள் சென்றது குறித்து எனக்குத் தெரியாது.

எனது மகன் கறுப்பு நிற ரீசேட்டும் பச்சைக் கோடு போட்ட சாரமும் அணிந்திருந்தார்.

19 ஆம் திகதி மாலை மகன் வீடு திரும்பாததனால் மகனைத் தேடி மிருசுவில் சென்றேன்.

நான் சென்ற சமயம் மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் எனக்குத் தெரியாத ஒருவருடன் எனது மகன் சைக்கிளில் வருவதைக் கண்டேன்.

அப்போது எனது மகன் மிகவும் பயந்த நிலையில் காணப்பட்டார். அவரது முகமெல்லாம் வீங்கிக் காணப்பட்டது. காலில் கம்பியினால் கீறப்பட்ட காயங்கள் இருப்பதையும் கண்டேன்.

மகனுடன் சென்றவர்கள் எங்கே என்று கேட்டேன். அவர்கள் வரமாட்டார்கள் என்றும் -

அவர்களை இராணுவத்தினர் கைது செய்து மிருசுவில் முகாம் பகுதியில் வைத்துக் கண்களைக் கட்டி அடித்தனர் என்றும் - மகன் கூறினார்.

அவர்களில் இரண்டு அல்லது மூன்று பேரைப் படையினர் கத்தியால் குத்தி மலசலகூடக் குழிக்குள் தூக்கிப் போட்டதாகவும் தான் அங்கிருந்து தப்பியோடி வந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

பின்னர் அவரை நெல்லியடிக்கு கூட்டிக்கொண்டு வந்து ஈ.பி.டி.பி முகாமுக்குச் சென்றோம். அங்கிருந்து பின்னர் மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றேன். நான் அடையாளம் காட்டிய எட்டுப் பேரும் வெட்டியதாலும் குத்தியதாலும்தான் இறந்தனர் என்று நான் திடமாகக் கூறுகின்றேன்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-ம-31-117-173)

## கண்டியில் ஆர்ப்பாட்டம்

யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு கோரி நேற்று கண்டியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அரசமைப்பு மாற்றத்துக்கான பிரஜைகள் நடவடிக்கை அமைப்பு, காணாமற் போன படையினர் சங்கம் ஆகியவை இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன. (இ)

## இரண்டாவது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனையோரதும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

தமது அபிலாஷைகளை அச்சமின்றியும் எவரது அழுத்தம் இன்றியும் வெளியிடுவதற்கு மக்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் இந்த எழுச்சி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த எழுச்சி நிகழ்வை பாடசாலை மட்டங்களிலும் பொதுஅமைப்பு மட்டங்களிலும் தொடர்ந்து நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. (ம-6)

## திருவெம்பாவை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையினர், சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் உட்பட பல்வேறு சைவ ஆலய சபையினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அமைச்சர் டக்ளஸ் படைத்தரப்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி ஊரடங்கு நேரத்தில் தளர்வை ஏற்படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. பலாலி படைத்தரப்பும் இதனை ஊர்ஜிதம் செய்திருந்தது. (இ)

## கால்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது-

அந்த இடத்திற்குச் செ[illegible] வேண்டாம் என்றும் இராணுவத்தி[illegible] கண்டால் பிரச்சினை ஆகிவிடும் [illegible]றும் நான் கணவருக்குச் சொன்[illegible] அதற்குப் பின்னர் அந்த வி[illegible] குறித்து அவர் என்னிடம் எது[illegible] கூறவில்லை.

மிருசுவில் கொட்டிகைப் ப[illegible]யில் இராணுவத்தின் ஆட்லறித் [illegible] அமைக்கப்பட்டதால் அங்கிரு[illegible] இடம்பெயர்ந்து உடுப்பிட்டி[illegible] வசித்து வந்தோம்.

அங்கிருந்த போது மூன்றுமா[illegible]களுக்கு முன்னர் இறந்தவரை [illegible] திருமணம் செய்தேன். திரும[illegible]திற்கு முன்னர் எனது கணவர் [illegible] தொழில் செய்து வந்தார். [illegible]ணத்தின் பின்னர் மிருசுவிலு[illegible] அடிக்கடி சென்று தேங்காய் பு[illegible]தும், விறகு வெட்டியும் விற்பனை செய்து வந்தார்.

இவ்வாறு சென்று வரும் நா[illegible] ஒரு நாள் மஞ்சள்நிற பஞ்சாபி[illegible]டனான கால்களைக் கண்டது [illegible]றிக் கூறியிருந்தார். எனது த[illegible] ஜெயச்சந்திரன் இது பற்றி எது[illegible] கூறவில்லை. வேறு எவரும் இ[illegible] தொடர்பாக எனக்கு எதுவும் சொல்[illegible]வில்லை. பெண் பிள்ளை ஒரு[illegible] காணாமல் போனது குறித்தோ[illegible] கொல்லப்பட்டது குறித்தோ எந்த[illegible] தகவலையும் நான் அறியவில்லை.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ம-6-31-117-17[illegible])

மீண்டும்....
எலைற் கல்வி நிறுவனம்
192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தரம் 6 முதல் O/L வரை அனைத்து வகுப்புக்களும் மீண்டும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்:
03.01.2001 புதன் பி.ப.3மணி
(82303) -நிர்வாகி.

A/L 2003
(கலை,வர்த்தக பிரிவுகள்)
ஆரம்பம்
ஜனவரி 6
காலை 8 மணி
DMI
யாழ். நகர்
(81297)

A/L 2001
DAY CLASS
பங்குடைமை
திரு.பாலவாசன்
B.B.A (F.M.Spl)
ஆரம்பம்:
2.1.2001 - 11.00 a.m.
BEACON
(வெலிங்டன் சந்தியருகில்)
(82199)

புதிய வீடியோ
CD வெளியீடு
என்னவளே CD
நீ எந்தன் வானம்
விஷ்ணு வீடியோ
K.K.S வீதி.
கோண்டாவில்
(82369)

Good Bye 2000!
Join with us
in the New Year

2001ம் ஆண்டுக்கான
வர்ண நாட்காட்டி உள்ளே.....
IBMS 701, K.K.S Rd., Jaffna.
T.P: 021-3165

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
* நீ எந்தன் வானம்
மாதவனின்
* என்னவளே
வீடியோ CD பிரதிகளை
காலை 8.30 மணிக்குப்
பெற்றுக் கொள்ளலாம்
அல்டி எலெக்ரோனிக்ஸ்
15,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் (C/14572

சிவா நறுமணப் பூங்கா
புதுமையுடன் வழங்கும்
சிவாவின் புதுவெள்ளம்
யாழ். F.M. சேவையில் புதுவருடத்தை முன்னிட்டு
இன்று (31-12-2000) ஞாயிறு இரவு 9.30 முதல் 10மணி (புதிய நேரம்)
வரை கேட்டு பல அரிய பரிசுகளை வெல்லுங்கள்.
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அண்மையில்)
தொலைபேசி.இல: 2567
(82322)

STP Computer World
No: 54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
நாளை மலரும் புதுவருடத்தில் எம் இனிய
புதுவருட வாழ்த்துக்கள்.
கணனி அறிமுக விழா
மாணவர்களே! பெற்றோர்களே!! உத்தியோகத்தர்களே!!!
புதுவருட தினத்தில் கால் பதிக்கும் உங்கள் அனைவரினதும் கணனி அறிவை மேம்படுத்தும் நோக்கில் 01-01-2001 இல் STP கணனி உலகிற்கு உங்களை அழைக்கின்றோம்.
அனுமதி - இலவசம்
Free e-mail Service
இன்றும் நாளையும் உங்கள் உறவினர்களுக்கு புதுவருட வாழ்த்து மடல்களை எமது e-mail சேவையின் ஊடாக கட்டணமின்றியே அனுப்பிவைக்கலாம்.
Director

தேசிய சேமிப்பு வங்கி அறிவித்தல்
சாவகச்சேரிக் கிளை
இதுவரை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ். தேசிய சேமிப்பு வங்கிக் கட்டடத்தில் இயங்கி வந்த எமது சாவகச்சேரிக் கிளை நாளை (01-01-2001) திங்கள் தொடக்கம் இல. 171, யாழ். ஸ்ரான்லி வீதியில் (வெலிங்டன் சந்திக்கருகில்) புஷ்பா கட்டடத்தில் இயங்கும் என்பதை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
சாவகச்சேரி.
(82335)

எமது புதிய
வீடியோ CD
வெளியீடுகள்
* நீ எந்தன் வானம்
* என்னவளே
ரகுமான் - ஸ்ரீ வித்தியாவின்
* நெஞ்சே நெஞ்சே
* சம்மதம் தருவாளா
* திரை மெட்டுக்கள்
(மிகப் புதிய பாடல்கள்)
ஒரிஜினல் வீடியோ CD
வெளியீடுகள்
* தெனாலி (ஐங்கரன் V.C.D)
* சிநேகிதியே (ஐங்கரன் V.C.D)
(பிரதிகளை உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/14573)

கணனிகள் விற்பனைக்கு
Pentium III 800 & Laptop Computers
யாழ். மாவட்டக் கணனிப்பிரியர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய எமது விற்பனைப்பிரிவு நவீன கணனிகளையும், உதிரிப்பாகங்களையும் யாழ்நகரில் நியாய விலையில் சந்தைப்படுத்தியுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு

IIS விற்பனைப்பிரிவு.
100, மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி அம்மணிப்பிள்ளை சின்னவி

திருமதி அம்மணிப்பிள்ளை சின்னவி நேற்று (30.12.2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி செங்கமலம் (உடுப்பிட்டி தெற்கு), காலஞ்சென்ற சண்முகம் (கம்பர்மலை), சின்னக்கிளி (ஊரிக்காடு), மார்க்கண்டு (வன்னி), நற்குணம் (வீடமைப்பு அதிகார சபை - திருகோணமலை), தங்கவேல் (பவளமலர்- உடுப்பிட்டி தெற்கு), சிவலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (31.12.2000) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் கரும்பாளி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.ருவேந்திரா (பேரன்)
சர்வோதயம்.

வீரபத்திரர் கோயிலடி தெற்கு,
உடுப்பிட்டி.

(C/14577)

"முகாமை நோக்கு" சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக
யாழ்/பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றமும் IBMS கணனி நிறுவனமும்
இணைந்து நடாத்தும் மாபெரும்
கணனிக்கண்காட்சி-2001
இடம் - IBMS கணனி நிறுவனம் ,K.K.S வீதி, யாழ்ப்பாணம்
காலம் - 06.01.2001 - 10.01.2001
நேரம் - காலை.9.00 - மாலை.5.00
முகாமைத்துவ மாணவர் மன்றம்
யாழ் /பல்கலைக் கழகம்.
IBMS

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.